# இலக்கு

வாராந்த மின்னிதழ்

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

இதழ் : 22 - 21.04.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com


## உயிர்த்த ஞாயிறில் உறைந்த உயிர்கள். தொடர் குண்டுவெடிப்பில் 215 பேர் பலி, 452 பேர் காயம். மேலும் அதிகரிக்கும் அபாயம்



மூன்று தேவாலயங்கள், பிரபல விடுதிகளை இலக்கு வைத்து வேட்டை

## ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர் கட்சி அரசியல் செயற்பாட்டில் தலைமையேற்பது ஒரு அபூர்வம் அவருடய செயல் மிகவும் பாராட்டிற்குரியது.

சென்னை உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி அரிபரந்தாமன்





## இனப்படுகொலையில் சிக்கிய எமது மக்களின் கதறல் சத்தம் இன்னும் எனது காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது

முள்ளிவாய்க்காலில் களமருத்துவராக பணியாற்றிய தர்மரத்தினம் வாமன்

## இந்த சின்னஞ்சிறிய தேசத்திலே அரசிடம் கையிலே கொடுத்த எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதே எமது கேள்வி



திருகோணமலை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி செல்வராஜா சறோஜாதேவி

# உயிர்த்த ஞாயிறில் உறைந்த உயிர்கள். தொடர் குண்டுவெடிப்பில் 215 பேர் பலி 452 பேர் காயம். மேலும் அதிகரிக்கும் அபாயம்

## மூன்று தேவாலயங்கள், பிரபல விடுதிகளை இலக்கு வைத்து வேட்டை

சிறிலங்காவில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 215 ஆக அதிகரித்துள்ளதுடன், காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 452 ஆக அதிகரித்துள்ளது.



உயிர்த்த ஞாயிறு தினமான (21) இன்று காலை கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்திலும், நீர்கொழும்பு கட்டுவப்பிட்டிய செபஸ்டியன் தேவாலயம், மட்டக்களப்பு சியோன் தேவாலயம் ஆகிய தேவாலயங்களிலும் பிரபல விடுதிகளான சினமன் கிராண்ட், ஷங்ஹிரில்லா, கிங்ஸ்பெரி ஆகியவற்றிலும், தெஹிவளை ட்ரொபிகல் இன், தெமட்டகொட மகவில பூங்கா ஆகியவற்றிலும் குண்டுவெடிப்புக்களும், தற்கொலைத்தாக்குதல்களும் இடம்பெற்றிருந்தன.

இதனால், கொழும்பு தேசிய மருத்துவமனையில் 66 சடலங்கள் வைக்கப்பட்டுள்ளன. அங்கு, 260 பேர் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். நீர்கொழும்பு மருத்துவமனையில், 104 சடலங்கள் வைக்கப்பட்டுள்ளன. அங்கு 100 பேர் காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கொழும்பு வடக்கு



மருத்துவமனையில் 30 பேரும், மட்டக்களப்பு மருத்துவமனையில் 69 பேரும், நீர்கொழும்பு மருத்துவமனையில் 55 பேரும், லேடி றிஜ்வே சிறுவர் மருத்துவமனையில் 14 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## தொடர் குண்டுவெடிப்பில் 33 வெளிநாட்டவர்கள் பலி. பலர் படுகாயம்

சிறிலங்காவில் இடம் பெற்ற வெடிப்பு சம்பவங்களில் 11 நாடுகளைச் சேர்ந்த 33 வெளிநாட்டவர்கள் உயிரிழந்ததோடு பலர் படுகாயம் அடைந்துள்ளார்கள் பலியானவர்களின் சடலங்கள் மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதாக, வெளிவிவகார அமைச்சின் செயலர் ரவிநாத ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

இறந்தவர்களின் சடலங்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதாக கூறியதோடு மேலும் ஐந்து பேரைக் காணவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.



போலந்து. பாகிஸ்தான்,டென்மார்க், அமெரிக்கா, இந்தியா, மொராக்கோ, சீனா, யப்பான், பங்களாதேஷ் நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், 35 வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஏ.எவ்.பி செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பின் பிரபல விடுதிகளில் தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் அனைவரும் வெளியேறி வருவதோடு விடுதிகள் அனைத்தும் பாதுகாப்பு படையினரின் பலத்த பாதுகாப்புடன் மூடப்பட்டுள்ளது.

## குண்டுவெடிப்பின் எதிரொலி 7 சந்தேக நபர்கள் கைது

### பின்னணி விரைவில் வெளியாகும்!

சிறிலங்காவில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களை ஒருங்கிணைத்தனர் என்ற சந்தேகத்தில் 7 பேரைக் கைது செய்திருப்பதாக சிறிலங்காவின் பாதுகாப்பு இராசாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார். இந்த தாக்குதல்கள் பெரும்பாலும் தற்கொலைக் குண்டுதாரிகளாலேயே நடத்தப்பட்டுள்ளன என்றும் ஒரே குழுவே இதனை நடத்தியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை இதில் பெண்ணொருவரும் உள்ளடங்குவதாக தெரிய வருவதோடு வெள்ளவத்தையில் குண்டு தாக்குதல்களை நடத்தியவர்கள் பயணித்ததாக சந்தேகிக்கப்படுகின்ற வான் ஒன்று மீட்கப்பட்டுள்ளதோடு சந்தேகநபர்கள் சிலரும், வெடிபொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் தரப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

# குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு பாப்பரசர் பிரான்சிஸ் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் கண்டனம்



சிறிலங்காவில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டு பெருந்தொகையானோர் காயமடைந்த சம்பவத்தை உலகத் தலைவர்கள் பலரும் கண்டித்துள்ளனர். இந்த தாக்குதலைக் கண்டித்துள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் சிறிலங்காவுக்கு உதவத் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார். றோமில் நடந்த உயிர்த்த ஞாயிறு ஆராதனையின் போது இந்த தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்த பாப்பரசர் பிரான்சிஸ் பாதிக்கப்பட்டவர்களுக்காக இரங்கல் தெரிவித்தார். மேலும் ஐ. நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரிஸ் மற்றும் பல்வேறு நாடுகளின் தலைவர்களும் இந்த மோசமான தாக்குதல்களைக் கண்டித்துள்ளனர்.

## வெளிநாட்டில் சனாதிபதி மைத்திரி பிரதமர் தலைமையில் கூட்டங்கள்

சனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிங்கப்பூரில் தங்கியிருக்கின்ற நிலையில், தொடர்குண்டுவெடிப்புக்கள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுத்து நாட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் இன்று காலை பாதுகாப்புச்சபைக் கூட்டம் கூட்டப்பட்டது. நாட்டின் நிலைமைகள் குறித்து ஆராயப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடன் நடவடிக்கைகளை எடுப்பதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து பிரதமர் ரணில் அவசர அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார். நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விடுமுறை அறிவிப்பு

## பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டன

அனைத்துப் பல்கலைக்கழகங்களும் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. சிறிலங்காவில் நாளையும், நாளை மறுநாளும் சிறப்பு விடுமுறை நாட்களாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன், நாளை இரண்டாம் தவணைக்காக ஆரம்பமாகவிருந்த பாடசாலைகளுக்கான விடுமுறை, புதன்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கு மாகாண நிருவாக எல்லைக்குட்பட்ட அனைத்து அரச திணைக்களங்களும் நாளை இயங்கமாட்டாதென வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் அறிவித்துள்ளார்.

# கல்முனையில் தனியான அலகு தமிழரின் இருப்புக்கான கோரிக்கையே

இலங்கையில் மாவட்ட ரீதியாக நிருவாக அலகுகள் வகுக்கப்பட்டுள்ள நிலையில் அம்பாறை மாவட்டமும் அதற்கு விதிவிலக்கின்றி 20 பிரதேச செயலாளர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நிருவாகம் செய்யப்பட்டு வருகின்றது.

அவற்றுள் கல்முனை தமிழ் உப பிரதேச செயலகமும் ஒன்றாகும். இந்த உபசெயலகம் மட்டும் தான் அம்பாறை மாவட்டத்திலேயே அதிகாரங்கள் பூரணமாக கொண்டிருக்காத குறைமாதக் குழந்தையாக இருக்கின்றது. தமிழர்கள் அதிகமாக வாழ்கின்றமையினாலோ என்னவோ இந்த நிலைமை 1989 ஆம் ஆண்டு முதல் தற்போது வரையில் தொடர்கதையாக இருக்கின்றது.

இந்த உப செயலகத்தினை 1993 ஆம் ஆண்டிலிருந்து முழுமையான அதிகாரங்களைக் கொண்ட ஒரு உள்ளூராட்சி அலகாக மாற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் எட்டாக்கனியாகவே இருந்து வருகின்றது. இந்தக் கோரிக்கையை வலுவாக்க முனைகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அரசியலும் இனவாதமும் தாராளமாக உயர்த்தப்பட்டு அப்படியே கிடப்பில் போடப்படுகின்றன.

இந்த உப செயலகமானது, 29 கிராமசெயலாளர் பிரிவுகளையும், 36346 மக்கள் தொகையையும் கொண்டிருக்கின்றது. 90 சதவீதமான பூர்வீக தமிழின குடிப்பரம்பலைக் கொண்டிருக்கின்றது. அப்படியிருக்கையில் தற்போதைய சூழலில் இந்த செயலகத்தினை தரமுயர்த்தும் கோரிக்கைக்கான 'பிடி'யை விட்டால் கல்முனை தமிழர்கள் காணாமலாக்கப்பட்டுவிடும் பேராபத்தே ஏற்பட்டுள்ளது.

கல்முனை வாழ் தமிழர்களின் விருப்பின்றி உத்தேச கல்முனை அபிவிருத்தி திட்டத்தினை முன்னெடுப்பதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அனைத்து முயற்சிகளையும் எடுத்துள்ளது. இதற்கு சமகாலத்திலேயே சாய்ந்த மருதுக்கான கோரிக்கையும் முடுக்கி விடப்பட்டுள்ளது.

இந்த இருவிடயங்கள் சமகாலத்தில் நகர்த்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால் கல்முனை வாழ் தமிழர்களின் இருப்பின் ஆணிவேரை அறுத்தெறியும் நிலையே உருவாகும். அதனால் கல்முனை தமிழர்களின் சமூக, பொருளாதார, அரசியல் இருப்பு கேள்விக்குறியாகும். இந்த ஆபத்தினை முதலில் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

தமிழ் மக்கள் அடக்குமுறைக்கு எதிராக அகிம்சை வழியில் தொடங்கி ஆயுத போராட்டம் வரை பல உயிர்த் தியாகங்கள் செய்தவர்கள். ஆகவே அவர்கள் அந்த வலியை உணர்ந்தவர்கள். ஆகவே அரசியலுக்காக பிரதேசவாதத்தை தூண்டி சாய்ந்தமருது மக்களின் நியாயபூர்வமான கோரிக்கையையும், தமிழ் மக்களுக்கான தனி பிரதேச செயலக கோரிக்கையையும் இனவாதமாக சித்தரித்து காட்டி அரசியல் குளிர்காய முயற்சிக்கப்படுகின்றது.

தமிழர்கள் 12 ஆம் வட்டாரத்தை வென்றால் நகரம் பறிப்போய் விடும் என்றார்கள். ஆனால் அப்படி நடக்கவும் இல்லை. இனவாதம் தூண்டப்படவும் இல்லை. சாய்ந்தமருது பிரிந்தால் தமிழர்கள் கல்முனையில் முஸ்லிம்களை நசுக்கி ஆள்வார்கள் என்பது சனத்தொகை வீதத்தை வைத்து பார்க்கின்றபோது பொய்யாகவே உள்ளது.

காணி அதிகாரம் வந்தால் முஸ்லிம்கள் நிலம் பறிப்போகும் என்றால், கல்முனை 29 கிராம செயலர் பிரிவில் இருக்கும் மக்களின் காணிகளையும் அதற்குட்பட்ட அரச காணிகளையும் குறித்த வடக்கு பிரதேச செயலகம் தற்போது மக்களை நிர்வகிப்பதுபோல் நிர்வகித்தால் எப்படி முஸ்லிம்களை நசுக்க முடியும்.


தமிழருக்கான பகுதியை நிலத்தொடர்பற்ற முறையில் பிரிக்க முடியாது என்று கூறமுடியாது. இலங்கையின் நிருவாக ரீதியில் மூன்று பிரதேச செயலகங்கள் இவ்வாறாக இயங்குகின்றன.

மேலும் கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகத்தை பிரித்து முஸ்லிம்களுக்காக ஓட்டமாவடி பிரதேச செயலகம் அமைக்கலாமென்றால், ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்தை பிரித்து முஸ்லிம்களுக்காக 15 கிராம சேவகர் பிரிவுகளை கொண்டு ஏறாவூர் நகர் பிரதேச செயலகம் என அமைக்கலாம் என்றால், மட்டக்களப்பு கல்வி வலயத்தை பிரித்து மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் முஸ்லிம்களுக்காக அமைக்கலாமென்றால் ஏன் கல்முனைவாழ் தமிழ் மக்களின் இந்த கோரிக்கையை ஏற்க முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைப் பொறுத்தவரையில், வாக்குவங்கி தந்திரோபாயங்களுடன் செயற்படுகின்றதே தவிரவும், கிராம மட்டத்தில் மக்களின் உணர்வுகளை, களநிலைமைகளை புரிந்துகொண்டு சமூக இருப்பினை பாதுகாப்பதற்கான எவ்விதமான பொறிமுறையோ நிகழ்ச்சி நிரலோ இல்லை.

அப்படியிருக்க, தமிழர்கள் தமிழீழம் கேட்டார்கள் - கிடைக்கவில்லை. சுயாட்சி கேட்டார்கள், - கிடைக்கவில்லை, மாகாணசபைகளுக்கு அதிகாரத்தை கேட்டார்கள் - கிடைக்கவில்லை, பிரதேச செயலகம் ஒன்றையாவது தரமுயர்த்தி தருமாறு கோரினார்கள்- அதுவும் கிடைக்கவில்லை என்ற கையாலாகாத நிலைமை ஏற்பட்டு விடவே கூடாது. ஆகவே கல்முனை விடயத்தில் கூட்டமைப்பு தலைமையேற்று சாதனை செய்யும் என்று நம்புவதை விடவும் அம்பாறை மாவட்டத்தின் அனைத்து தமிழ் அரசியல் வாதிகள், சிவில் சமூகத்தினர், புத்திஜீவிகள் பொதுமக்கள் அனைவரும் பேதமின்றி இணைந்த பொதுவேலைத்திட்டமே இலக்கை அடைய வழிசமைக்கும்.










# குண்டு வெடிப்புகளின் பதிவுகள்









# ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர் கட்சி அரசியல் செயற்பாட்டில் தலைமையேற்பது ஒரு அபூர்வம். அவருடைய செயல் மிகவும் பாராட்டிற்குரியது.

**சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தவர் நீதிபதி அரிபரந்தாமன் அவர்கள். இவர் ஓய்வுபெற்ற பின்னரும் மக்களின் உரிமைக்காக மனித உரிமை தளத்திலே தொடர்ந்து குரல்கொடுத்து வருகிறார். ஈழத் தமிழர்களிற்கு நீதி வேண்டி கடந்த வருடம் சென்னையில் இடம்பெற்ற பன்னாட்டு வழக்கறிஞர் மாநாட்டிற்கு இவர் தலைமை தாங்கி சிறப்பாக மாநாட்டை வழிநடத்தினார். அத்துடன் இவர் கடந்த வருடம் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் கூட்டத்தொடரில் பங்கேற்று ஈழத் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பிற்கு பன்னாட்டு விசாரணை வேண்டும் என்று வலியுறுத்தியதன் மூலம் உலகத் தமிழர்களின் இதயங்களில் இடம்பிடித்தார். ஈழத் தமிழர்களின் நீதிக்கான பயணம் குறித்து இலக்கு மின்னிதழுக்கு அவர் வழங்கிய சிறப்பு நேர்காணல்.**

கேள்வி : முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்ந்து 10 ஆண்டுகள் ஆகின்றது. ஒரு மனிதப் பேரவலம் நடந்துவிடப் போகின்றதென்பதை உணர்ந்த எங்களது மக்கள் ஐ.நாவின் நிறுவனங்களை எங்கள் மண்ணிலிருந்து வெளியேற வேண்டாமென கதறியழுது மன்றாடினார்கள். மனித வரலாறு சந்தித்த அலுலங்களுக்குள் மிக மோசமான பேரவலம் நிகழ்வதையும் நிகழப்போவதையும் அறிந்திருந்தும் அந்தப் பேரவலத்திலிருந்து பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டிய பேரமைப்பு தங்களது பணியாளர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லை என்று காரணம் காட்டி எங்கள் மக்களை கைநெழிந்து வெளியேறினார்கள். இது எந்த வகையில் நியாயமானது? இந்த நிலையில் இந்தப் பேரமைப்பிடம் நீதியை எதிர்பார்க்கும் தமிழர்களின் நிலைப்பாட்டை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

2009 இல் ஈழத் தமிழினம் அழிக்கப்பட்டபோது, உலகில் இந்தியா உட்பட எந்த நாடும் தமிழின அழிப்பைத் தடுப்பதற்கு குறிப்பிடத்தக்க நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. இதில் ஐ.நா.வும் அடக்கம். இது உண்மை. ஆனால், இரண்டாம்



உலகப் போருக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட ஐ.நா. அமைப்பை தேசிய இன விடுதலைக்காகப் போராடும் இயக்கங்களும் மற்ற புரட்சிகர இயக்கங்களும் தங்களின் நோக்கத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவொரு இராசதந்திர நடவடிக்கை. உலகின் மிகப் பலம் பொருந்திய அமெரிக்கா போன்ற நாடுகள்தான் ஐ.நா.வின் செயல்த்திட்டத்தை தீர்மானிக்கின்றன. இருப்பினும் அந்த அமைப்பைப் பயன்படுத்திக் கொள்வதே சரியான முடிவாக இருக்கும். பேரவலத்தின் போது ஐ.நா. ஊழியர்களைக் கூட உலக நாடுகள் காப்பாற்ற முன்வரவில்லை. இந்த நிலையில் அவர்கள் வெளியேறும் முடிவை எடுத்திருக்கும் போது அதை காரணமாகச் சொல்லி ஐ.நா. அமைப்பை நிராகரிப்பது தேச விடுதலை இயக்கத்திற்குப் பின்னடைவை உண்டாக்கும் அதே நேரத்தில், ஐ.நா. மூலமாக தேச விடுதலையையே பெற்றுவிடலாம் என்று கனவும் காண வேண்டாம். இதுவரையில் எந்த தேச விடுதலையும் அவ்விதம் பெறப்படவில்லை.

கேள்வி : அண்மையில் நடந்து முடிந்த ஐ.நா மனித உரிமைகள் அவையின் 40வது கூட்டத்தொடரில் சிறீலங்காவுக்கு மேலும் 2 ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. உள்நாட்டில் நீதி மறுக்கப்பட்டு தொடர்ச்சியான கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு உள்ளாகும் ஒரு பேரினம் உலகத்திடம் தனக்கான நீதியை வேண்டி நிற்கிறது. ஒரு நீதிபதியாக இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

2015 வரை இலங்கையே போர்க்குற்றங்கள் பற்றி விசாரித்துக் கொள்ளலாம் என்ற நிலைப்பாடே ஐ.நா.வின் நிலைப்பாடாகவும் இருந்தது. அதாவது, இலங்கை அரசே கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணையம் ( LLRC) போன்ற பொறியமைவுகளின் வழி போர்க்குற்றங்கள் பற்றி விசாரிப்பதற்கு வாய்ப்பளித்தும் அந்த அரசு குறிப்பிடத்தகுந்த எந்த செயலையும் செய்யவில்லை என்ற முடிவுக்கு வந்து 2015 இல், பன்னாட்டு நீதிபதிகள் பங்கேற்புடனான உள்நாட்டு விசாரணை நடைபெறுவது சம்பந்தமாக ஐ.நா. மனித உரிமை மன்றம் முடிவெடுத்தது. இவ்வாறு முடிவெடுப்பதற்கு உலக வல்லரசு நாடுகள் இலங்கையை நிர்ப்பந்தித்ததன் பேரில் இலங்கையும் இந்த தீர்மானத்திற்கு ஒப்புக்கொண்டது என்பதே ஐ.நா. மன்றத்தை முடிந்த வரை தேச விடுதலை இயக்கங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

ஆனால், இதை இரண்டாண்டுகள் கழித்தே அமுல்ப்படுத்தப் போவதாக அறிவித்தது. இந்த இரண்டாண்டுகளில் இலங்கை அரசு பயங்கரவாத தடைச் சட்டம் போன்ற மனித உரிமை மீறல் சட்டங்களை ரத்து செய்து உரிய சட்டத்தை இயற்றிக் கொள்ள வேண்டும், காணாமல் போனோர் சம்பந்தமாக விசாரிக்க ஓர் அமைப்பை உண்டாக்க வேண்டும் போன்ற வாய்ப்புகளைத் தருவதாக ஐ.நா. மனித உரிமை மன்றம் கூறியது. அதாவது, 2015 தீர்மானத்தை ஆதரிப்பதாக வேடம் போட்ட இலங்கை அரசு இரண்டாண்டு அதை தள்ளிப் போடுவதற்கான வேலையை செய்தது. இத்தீர்மானத்தை உடனே நிறைவேற்ற வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கும் அளவில் தமிழ் இயக்கங்கள் இல்லை. இப்போது மீண்டும் இரண்டாண்டுகள் காலநீட்டிப்பை இலங்கை அரசு பெற்றுள்ளது. இந்த நீட்டிப்பிற்கும் இந்தியா உட்பட உலக நாடுகள் ஆதரவாக உள்ளன என்பதும் தமிழ் இயக்கங்கள் அழுத்தம் கொடுத்து உடனடி பன்னாட்டு விசாரணைக்கு தீர்மானம் கொண்டுவர இயலவில்லை என்பதையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

கேள்வி : ஜெனீவாவில் இலங்கைப் பிரச்சனை தொடர்பில் கடந்த சுமார் பத்து வருட காலமாக பேசப்படுகின்றது. இலங்கை தொடர்பில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றது. ஆனால் அவை எதுவுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை. சர்வதேச



சட்டங்களின் அடிப்படையிலும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நடைமுறை தொடர்பிலும் பார்க்கும்போது ஜெனீவாவில் தமிழ் மக்களுக்கு நீதியை உறுதிப்படுத்தக் கூடிய நடவடிக்கைகள் எதற்காவது வாய்ப்புள்ளதா?

முதலாவது கேள்விக்கான விடையில், ஐ.நா. மன்றத்தை தேச விடுதலை இயக்கங்கள் எப்படி பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எனது கருத்தை பதிவுசெய்தேனோ அதே கருத்தை ஐ.நா. மனித உரிமை மன்றத்திற்கும் பதிவிட விரும்புகிறேன். ஐ.நா. மனித உரிமை மன்றத்தை இலங்கை அரசு பயன்படுத்தும் போது அதன் எதிர் நடவடிக்கையாக தேச விடுதலை இயக்கங்கள் எந்த செயற்பாடும் இன்றி இருந்தால் இலங்கை அரசு தான் விரும்பியதை எளிதில் ஐ.நா. மனித உரிமை மன்ற தீர்மானமாக கொண்டு வந்துவிடும். 2015 இல் வந்த தீர்மானத்திற்கு தேச விடுதலை இயக்கங்களின் பங்கும் உண்டு. இருப்பினும் உலக நாடுகள் இராசபக்சேவை நீக்கிவிட்டு அந்த இடத்தில் இரண்டு எதிர்முகாம்களாக இருந்த சிறிசேனாவையும் ரணில் விக்ரமசிங்கேவையும் ஆட்சிப் பீடத்தில் அமரவைத்து இரண்டு ஆண்டுகள் அவகாசம் கொடுத்த செயலில் கூட



தேச விடுதலை இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு பங்கு உண்டு. ஆனால், உடனடியாக பன்னாட்டு விசாரணையைக் கொண்டுவரும் அளவிற்கு அழுத்தம் கொடுக்கும் நிலையில் தமிழ்

தொடர்ச்சி 6 ஆம் பக்கம் →

5 ஆம் பக்க தொடர்ச்சி

## ஓய்வு பெற்ற நீதிபதி

இயக்கங்கள் இல்லை. குறிப்பாக ஈழப் போரில் மிகப் பெரும் இன அழிப்பை சந்தித்த தமிழினம் இப்போதுள்ள சூழலில் ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் குறைந்தபட்சம் இந்த நீட்டிப்பு மீண்டும் நிகழா வண்ணமாவது பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு இந்தியா உள்ளிட்ட குறிப்பாக பலம் பொருந்திய அரசுகளிடம் மற்றும் மற்ற அரசுகளிடமும் அழுத்தத்தைக் கொடுத்து ஆதரவைப் பெறுவதற்கான வேலையில் இறங்க வேண்டும். உலகம் முழுவதும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பல தேச விடுதலை இயக்கங்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் பரஸ்பர ஒத்துழைப்பையும் ஆதரவையும் வளர்த்தெடுக்க வேண்டும். அதைவிடுத்து ஐ.நா. மனித உரிமை மன்றத்தால் எந்த நீதியும் செய்ய முடியாது என்ற முடிவுக்கு வருவது இலங்கை அரசுக்கு உதவுவதாகவே முடியும்.

மேலும் 2015 இல் நிலவிய உள்நாட்டு நிலைமையே இப்போதும் நீடிக்கவில்லை. அன்று தேசிய அரசாங்கம் என்ற பெயரில் சிறிசேனா-ரணில் விக்ரமசிங்கே என இரு கட்சிகளும் ஒன்றாய் நின்று நல்லாட்சி, மீளிணக்கம் என்றெல்லாம் உலகின் முன்பு கதைவிட்டன. இன்றோ இராசபக்சே, சிறிசேனா - ரணில் விக்ரமசிங்கே என இரு முகாம்களாகப் பிளவுபட்டு நிற்கின்றனர். இந்த காலநீட்டிப்பைக் கூட எதிர்த்துப் பேசி மொத்தமாக தீர்மானத்தையே கைவிட வேண்டும் என சிறிசேனா பேசக் கண்டோம். இன்னொருபுறம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைமைகள் உரிய வகையில் வினையாற்றாமல் தமிழ் மக்களிடம் அம்பலப்பட்டு நிற்கிறது. இந்த போக்குகளை வளர்ப்பது தமிழ் மக்களின் உறுதியான போராட்டத்தில் தங்கி இருக்கிறது. அப்படி இவை வளர்ச்சியுறும் போது சாதகமான நிலைமைகள் உருப்பெறும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

**கேள்வி : ஜெனீவாவில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது என்ற நிலைமையில் இந்தப் பிரச்சனையை அதாவது இனப்படுகொலை போர்க்குற்றச்சாட்டுகள் பொறுப்புக்கூறல் போன்றவை தொடர்பில் ஐ.நா. வின் பாதுகாப்புச் சபைக்கு அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பிரச்சனையை கொண்டு செல்லவேண்டும் என்ற ஒரு கருத்தும் முன்வைக்கப்படுகின்றது? அவ்வாறு கொண்டு செல்வதற்கான வாய்ப்புகள் உள்ளனவா? அதற்கு என்ன செய்ய வேண்டும்? அதன் மூலம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைக்குமா?**

ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமை மன்றம் போன்றதல்ல ஐ.நா. சபை. தேச விடுதலை இயக்கங்கள் நேரடியாக தங்கள் குரல்கள் ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் எழுப்பலாம் எழுப்ப வேண்டும். ஆனால், ஐ.நா. சபை என்பது முழுக்க முழுக்க உலக அரசியல் சார்ந்தது. குறிப்பாக ஐ.நா. பாதுகாப்பு அவை உலகின் வல்லரசுகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இந்தியாவால் கூட ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பின் தலைவர் மசூத் அசாரைப் பயங்கரவாதி என்ற பட்டியலில் சேர்க்க முடியவில்லை. குறிப்பாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இந்தியாவுக்கு துணையாக இருந்தாலும் சேர்க்க முடியவில்லை. இருப்பினும் இந்தியா தொடர்ந்து இதை தடுக்கும் சீனாவுடன் முரண் ஏதும் கொள்ளாமல் சீனாவையும் தன் முயற்சிக்கு உடன்பட வைக்க இராசதந்திர நடவடிக்கை எடுத்துவருகிறது. இதுபோன்ற உலக அரசியல் நிகழ்வுகளை தேச விடுதலை இயக்கங்கள் உன்னிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

இன்றைய உலக ஒழுங்கில் தேசிய இன சிக்கலைத் தீர்த்து கொள்வதில் ஏற்றத் தாழ்வான வளர்ச்சி நிலைமைகளே இருக்கின்றன. ஐரோப்பாவிலேயே பிரிட்டன் ஸ்காட்லாந்தின் பிரிந்து போகும் உரிமையை ஏற்று பொதுவாக்கெடுப்பு நடத்துகிறது. ஆனால், ஸ்பெயினோ கடோலேனியாவின் பிரிந்து போகும் உரிமையை ஏற்க மறுக்கிறது. ஆசியாவின் நிலைமையோ இன்னும் மோசம். தேசிய இனங்கள், அவற்றுக்கான சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை இங்குள்ள அரசுகள் கொஞ்சம்கூட மதிப்பதில்லை. இத்தகைய நிலைமைகளையும்கூட தேச விடுதலை இயக்கங்கள் உற்று கவனித்து தமது வியூகங்களை வகுக்க வேண்டியுள்ளது.

**கேள்வி : வடமாகாண சபையிலும் தமிழக சட்டப்பேரவையிலும் இலங்கை பன்னாநாட்டு விசாரணை வேண்டும் என்று வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஐ.நா.வுக்கும் அனுப்பப்பட்டு இருக்கின்றது. ஆனால் அவை கணக்கில் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. இதற்கு காரணம் என்ன?**

இவ்விரு அவைகளும் இறையாண்மை அற்றவை. இறையாண்மை கொண்ட அரசுகளின் தீர்மானங்கள் மட்டுமே ஐ.நா. வில் கவனத்தில் கொள்ளப்படும். இந்தியா தன் நிலைப்பாட்டில் மாறுபாடு கொண்டு ஈழத் தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத்தை 1980 களில் ஆதரித்தது போன்ற நிலைப்பாட்டை எடுப்பதற்கு கேள்வியில் குறிப்பிடப்படும் தீர்மானங்களை உபயோகப்படுத்திக் கொள்ள வாய்ப்புண்டு.

**கேள்வி : தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது இலங்கை அரசுடன் இணைந்து தமிழ் மக்களுக்கு துரோகம் செய்கிறது என்ற குற்றச்சாட்டை முன்வைத்து முன்னாள் வடக்கு மாகாணசபை முதலமைச்சர் ஓய்வு பெற்ற நீதிபதி விக்னேஸ்வரன் அவர்கள் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளார். அவர் ஒரு நீதிபதியாக இந்த நிலைப்பாட்டை எடுத்ததை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

ஈழத் தமிழ்த்தேசிய விடுதலை இயக்க வரலாற்றை 2009 க்கு முன், 2009 க்குப் பின் என்று பிரித்துப் பார்க்க வேண்டும். 2009 இல் பெரும் இன அழிப்பைத் தமிழினம் சந்தித்தது. இப்போது அதன் முன்னுள்ள ஒரே வழி இருக்கும் சனநாயக வழியை முற்றிலுமாக பயன்படுத்திக் கொண்டு தங்களின் இலட்சியத்தை அடைவது. இதை ஐ.நா.வோ உலக நாடுகளோ எதிர்க்காது. ஆனால், உலகின் எந்த மூலையில் தேச விடுதலை இயக்கமோ எந்த ஒரு புரட்சிகர இயக்கமோ ஆயுதம் தாங்கியப் போராட்டம் நடத்தினாலும் அதை குறிப்பாக 2001 இரட்டை கோபுரத் தாக்குலுக்குப் பின் அமெரிக்காவும் அதன் பின் உள்ள நாடுகளும் பயங்கரவாத இயக்கம் என்று முத்திரை குத்திவிடுகின்றன. இதற்கு ஐ.நா.வைப் பயன்படுத்திக் கொள்கின்றன. 1990 க்கு முன்னர் சோசலிச முகாம் இருந்த போது தேச விடுதலை இயக்கங்கள் இப்படி ஒரு நெருக்கடியை சந்திக்கவில்லை. வியட்நாம் தேச விடுதலை இயக்கத்திற்கு இரசியாவும் சீனாவும் நேரடியாக அமெரிக்காவை எதிர்த்துப் போரிட ஆயுதம் கொடுத்துள்ளன. இன்றைய உலக நிலை அப்படியில்லை. 2009 இல் இரசியா, சீனா, கியூபா ஆகிய அனைத்து முந்தைய சோசலிச முகாமைச் சேர்ந்த நாடுகள் இன அழிப்பிற்கு ஆதரவாகவே நின்றன. அமெரிக்கா உள்ளிட்ட வெளிப்படையான ஏகாதிபத்திய நாடுகளின் ஆதரவுடனே இந்த இனப்படுகொலை நடந்தேறியது. இந்தியா இந்தப் போரில் பெரும் உதவியை செய்து நடத்தியதாக கோத்தபய இராசபக்சேவே பேட்டி அளித்திருந்தார்.

இந்நிலையில், தேச விடுதலை இயக்கங்கள் சார்ந்த அரசியல் அமைப்புகள் அனைத்தும் ஒன்றாக சேர்ந்து தங்களுக்குள் வித்தியாசங்களைத் தூக்கி எறிந்து சிங்களபௌத்தப் பேரினவாத அரசுக்கு எதிராக நிற்க வேண்டும். அதற்கான முயற்சிதான் 2009க்குப் பின்னும் இருந்துவரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு. ஆனால், கடந்த ஐந்து ஆண்டுகளாக இக்கூட்டமைப்பின் தலைமை பன்னாட்டு விசாரணை, வடக்கு கிழக்கு இணைப்பு, ஈழத் தமிழ்த்தேசிய இனத்திற்கான சுயநிர்ணய உரிமை, காணாமற் போனவர்களுக்கான பன்னாட்டு விசாரணை, சிங்கள இராணுவ வெளியேற்றம் போன்றவற்றில் வெளிப்படையாகவே இலங்கை அரசுக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டை எடுக்கத் தவறிவிட்டது.

இந்தப் பின்னணியில்த்தான், மேற்சொன்ன பிரச்சனைகளில் இலங்கை அரசைக் கடுமையாக எதிர்த்தும் இலங்கை வடமாகாண சபையில் பன்நாட்டு விசாரணைக்கு தீர்மானம் நிறைவேற்றியும் தீர்க்கமாக செயற்பட்டுள்ளார் வட மாகாணசபை முதலமைச்சர் ஓய்வு பெற்ற நீதிபதி விக்னேஸ்வரன். அவர் முதலமைச்சரான போது அவருக்கு என்று அரசியல் கட்சி ஏதும் இல்லை. ஆனால், இந்த நெருக்கடியான சூழலில் தலைமை ஏற்க வந்தார். அவருடைய காலத்தில் ஊழல், அதிகார துஷ்பிரயோகம் போன்ற எந்தக் குற்றச்சாட்டுக்கும் அவர் உள்ளாகவில்லை. இலங்கை அரசைக் கடுமையாக எதிர்கொண்டார். குறிப்பாக ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவர் கட்சி அரசியல் செயற்பாட்டில் தலைமையேற்று செயல்படுவது ஒரு அபூர்வ செயலே. அவருடைய செயல் மிகவும் பாராட்டுக்குரியது, அவருடைய செயலைத் தொடர்வதற்காக 81 ஆவது வயதிலும் புதிய கட்சி தொடங்கி இருப்பது பாராட்டுக்குரியது. மற்ற தமிழ்த்தேசிய அரசியல் அமைப்புகளை தன்னுடன் அவர் இணக்கமாக ஒருங்கிணைத்து இந்த அரசியலின் இலட்சியத்தை அடைய வேண்டும் என்பது எமது விருப்பம்.

**கேள்வி : நீதிக்கான ஈழத் தமிழர்களின் உரிமைப் போரில் தாய்த் தமிழக உறவுகளின் உண்மை வகிபாகம் என்ன?**

ஈழத்தில் அவர்கள் ஒற்றுமையாக ஓர் அரசியல் இயக்கமாக மலர்ந்து எந்த அளவிற்கு செயற்படுகிறார்களோ அதை ஒட்டித்தான் ஈழத் தமிழர்களின் உரிமைப் போரின் எதிர்காலம் இருக்கும். அதாவது, ஈழத் தமிழர்களின் அரசியலை முதன்மையாக அவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

அவர்களுக்கு குறிப்பாக உலகில் இயற்கையாக இரு நேச சக்திகள் உண்டு. ஒன்று, புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள். இரண்டு, தமிழகத் தமிழர்கள். தமிழகத் தமிழர்களின் அரசியல் இயக்கங்கள் இந்தியாவிற்கு அழுத்தம் கொடுத்து ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாடு எடுக்க வைக்க வேண்டும். இதற்கான முயற்சிகள் தொடர்ந்து, தொய்வின்றி நடைபெற வேண்டும். இப்போதிருப்பதைவிட இன்னும் காத்திரமாக நடைபெற வேண்டும். இந்திய அரசின் நிலைப்பாட்டை மாற்றும் அளவுக்கு நடைபெற வேண்டும். நடைபெறும் என்று நம்புகிறேன்.

**கேள்வி : கடந்த வருடம் தங்களின் தலைமையிலே சென்னையிலே ஈழத் தமிழர்களிற்கு நீதிவேண்டி மாபெரும் பன்நாட்டு வழக்கறிஞர்கள் மாநாடு இடம்பெற்றதோடு நீங்கள் ஐ.நா.மன்றத்திலும் சென்று உரையாற்றினீர்கள். இந்த முயற்சிகளின் நோக்கங்கள் குறித்து கருத்து கூற முடியுமா?**

மேலே சொன்னபடி, இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்திற்கு அழுத்தம் கொடுத்து ஈழத் தமிழரின் நீதிக்காக நிலைப்பாடு எடுக்க வைக்கும் முயற்சிகளின் ஒரு பகுதியே இந்த மாநாடு. இத்தகைய முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுப்போம்.

# இனப்படுகொலையில் சிக்கிய எமது மக்களின் கதறல் சத்தம் இன்னும் எனது காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது

## முள்ளிவாய்க்காலில் களமருத்துவராக பணியாற்றிய தர்மரத்தினம் வாமன்

இறுதியுத்தம் முள்ளிவாய்க்கால் மண்ணை நெருங்கி எமது மண்ணின் கடைசி அங்குல நிலமும் எதிரிப் படையால் முழுமையாக ஆக்கிரமிக்கப்படும் வரையிலும் தமிழீழ சுகாதார சேவையை சேர்ந்த மருத்துவர்களும் உதவியாளர்களும் அங்கிருந்த அரசமருத்துவர்களுடன் இணைந்து மிகவும் ஆபத்தான சூழ்நிலைகளிலும் இரவுபகல் பாராமல் போராளிகளுக்கும் பொதுமக்களுக்கும் தங்களால் முடிந்த மருத்துவ சேவையினையும் ஆற்றுப்படுத்தும் பணிகளையும் அர்ப்பணிப்புடன் மேற்கொண்டிருந்தனர்.

மருத்துவர்களை இறைவனுக்கு அடுத்த நிலையிலேயே வைத்து மனித சமூகம் கொண்டாடும் இந்த உலகிலே, இறுதி யுத்தத்திலே அங்கு பணியாற்றிய ஒவ்வொரு மருத்துவர்களையும் இறைவனுக்கு நிகராகவே எமது மக்கள் நேசித்தார்கள். எந்தவொரு அடிப்படை வசதிகளும் அற்ற நிலையிலே உயிர் இழப்புக்களை தடுப்பதிலும் நோய் கிருமிகள் பரவுவதை தடுப்பதிலும் இவர்கள் சந்தித்த சவால்களை மருத்துவ உளவியல் நிபுணர்களாலேயே வரையறுக்க முடியாதவை. மக்களிற்கு அருகில் இருந்து சாவின் நிமிடங்களையும் மக்களின் வலிகளையும், கதறல்களையும் ஒவ்வொரு மணித்துளிகளும் நெஞ்சுரத்துடன் எதிர்கொண்டவர்கள்

இவர்களில் தர்மரத்தினம் வாமனும் ஒருவர். இவர் தாயக விடுதலை என்ற இலட்சியதற்காக தனது காலை இழந்த நிலையிலும், ஒரு மருத்துவ போராளியாக முள்ளிவாய்க்கால் மண்ணில் கடைசி நிமிடம்வரை தனது பணியினை சிறப்பாக முன்னெடுத்திருந்தார்

ஐக்கிய நாடுகள் சபையும், அனைத்துலக சமூகமும் எமது இனத்தை கைவிட்ட நிலையில் சாட்சிகள் அற்ற இனப்படுகொலையை மேற்கொண்ட சிறீலங்கா அரசின் வான் படையும், கனரக ஆயுதப்பிரிவும் வைத்திய சாலைளை தேடித்தேடி தாக்கியழித்தபோதும், தமது



உயிர்களை துச்சமென மதித்து மக்களுக்காக பணியாற்றிய மருத்துவர்களில் வாமனும் ஒருவர். இவர் தமிழீழ சுகாதார சேவைகளின் துணைப் பொறுப்பாளராக இருந்தவர். தற்போது பிரித்தானியாவில் தஞ்சமடைந்துள்ள நிலையில் தமிழ் மக்களின் உரிமைக்காக சர்வதேச சனநாயக பொறிமுறைகளிற்கு உட்பட்டு



தன்னால் முடிந்தபணிகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார். முள்ளிவாய்க்கால் 10வது நினைவேந்தல் தினத்தை உலக தமிழர்கள் நினைவு கூரவுள்ள நிலையில் இலக்கு மின்னிதழுக்காக அவர் வழங்கிய நேர்காணல்.

**கேள்வி: முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் பத்தாவது ஆண்டு நினைவு சுமந்து தமிழினம் தற்போது நிற்கின்றது. இந்த நிலையில் சிறீலங்கா அரசு திட்டமிட்டு மேற்கொண்ட இந்த இனப்படுகொலையானது அனைத்துலக சமூகத்தால் புறக்கணிக்கப்படுவது தொடர்பில் நீங்கள் என்ன கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றீர்கள்?**

தமிழரின் பேராசையை அழித்தொழிக்கும் வரலாற்று அத்தியாயத்தின் முடிவு காலத்தில் நாடற்றவர்களாக தமிழர்கள் உலகெங்கும் பரவித் தப்பி வாழ்கின்றோம். அதன் ஓட்டத்தில் தோற்றம் பெற்ற தன் இனத்தின் தலைமையையே தமிழினம் இழந்திருக்கிறது.

தெற்காசியப் பிராந்தியத்தின் உலகப் பொருளாதாரப் போட்டியாளர்களின் நலன்களுக்கு போதுமான அளவுவரை மட்டுமே இலங்கையின் இனப்படுகொலை விவகாரம் எனும் பந்து மனிதவுரிமைகள் மைதானத்தில் விளையாடப்படுகிறது. இந்த நலன்கள் சார்ந்து பணிந்து விட்டுக் கொடுக்க முடியாத அரசியல் தேவையாகவே தமிழின இறைமை அடிப்படையிலான உரிமை அமைந்து கிடக்கிறது.

இந்தியாவின் பிராந்திய ஆதிக்கம் நிலைபெறுவதற்கு தமிழர் தாயகத்தை வலுப்படுத்துவது ஒன்று மட்டுமே தீர்வாகுமானால் மாத்திரமே இலங்கையின் திட்டமிடப்பட்ட இனப்படுகொலையை ஒரு முதலீடாக இந்தியா எடுத்தாழும். உலக ஒழுங்கில் இந்தியாவுடன் சாரும் நாடுகள் இந்த அடிப்படையிலேயே இலங்கையின் விடயத்தைக் கையாளும் இந்த வல்லாண்மைப் போட்டிகள் தெளிவாகத் தெரியும் வகையிலேயே இலங்கைப் பாராளுமன்ற இழுபறியில் ஈழத் தமிழரின் சனநாயக சக்தியை உலகம் பாவித்துக் கொண்டுள்ளது. இந்த உலகத்துக்கு மனிதவுரிமைகளை நிறுவுவது மட்டுமே தேவையாக மாறும் நாள் சில நூற்றாண்டுகள் தொலைவிலேயே உள்ளது.

**கேள்வி: ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர்களை வன்னியில் இருந்து வெளியேற்றிய சிறீலங்கா அரசு ஒரு சாட்சியமற்ற இனப்படுகொலையை மேற்கொண்டிருந்தது. எனவே சிறீலங்கா அரசு மேற்கொண்ட இந்த இனப்படுகொலையின் சாட்சியமாக அங்கு கடமையாற்றிய வைத்தியர்கள் இருக்க வேண்டும் என்பது தொடர்பில் நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?**

அதிஸ்ட வசமாக அனேகமான வைத்தியர்கள் போரில் தப்பிப் பிழைத்துத் தமது சாட்சியங்களை முடிந்தளவுக்கு அனைத்து மட்டங்களிலும் பதிவு செய்திருக்கிறார்கள். அப்படி இருந்த போதிலும் அவர்களது சாட்சியங்கள் உலக மக்களின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பப் போதுமானதாக இல்லை. தமது கண் முன்னே நடைபெற்ற பல உண்மைகளைக் கண்ட சில நடுநிலைச் சாட்சியாளர்களாக அமையக்கூடிய வைத்தியர்கள் விளைவுகளைக் கருதி அமைதி காத்து வருவதை மறுப்பதற்கில்லை. சர்வதேச நீதி விசாரணை சாத்தியமாகும் தருணத்தில் அனைவரும் மௌனம் கலைப்பார்கள் என்பது எனது உறுதியான நம்பிக்கை. இலங்கை அரசின் புலனாய்வாளர்களின் அழுத்தத்துக்கு மத்தியிலேயே சிறையில் அடைக்கப்பட்டிருந்த வைத்தியர்கள் ஊடகத்தில் பொய்யாகச் சாட்சியமளிக்க நேர்ந்தது. அமெரிக்காவில் தஞ்சமடைந்த பின்னர் வைத்தியர் வரதராஜா அழுத்தத்திற்குப் பணிந்தே தாங்கள் கூறியதாகப் பின்னர் ஊடகங்கள் மூலம் பகிரங்கப்படுத்தியுள்ளார். வாகரையில் மற்றும் வன்னியில் போர் நடந்தபோது ஊடகங்களுக்கு உண்மைகளைக் கூறியதனால் போர் முடிந்த வேளையில் மூச்சுத் திணறும் நெஞ்சுக் காயத்துடன் கைது செய்யப்பட்டு மருத்துவ உதவி வழங்கப்படாமல் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார். அதே வைத்தியர் வரதராஜா. ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைச் சபை வரை சென்று தனது சாட்சியத்தை அவர் பதிவு செய்திருப்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தனது சாட்சியங்களை ஒரு திரைப்படமாக்கும் படப்பிடிப்பு முயற்சியிலே அவர் தற்போது உள்ளார். அதற்காக நிதி உதவிகளை தேசப்பற்றாளர்களிடம் அவர் பெரிதும் எதிர்பார்த்து கோரிக்கை விடுத்துள்ளார்.

**கேள்வி: வன்னிப் போரின் போது சிறீலங்கா அரசு மருந்தையும் உணவையும் போர் ஆயுதமாகப் பயன்படுத்தியிருந்ததா?**

ஆம். அரச மருத்துவ நிர்வாகம் கோரிய மருந்துகளில் போர்க்காயங்களை பராமரிக்கத் தேவையான குருதி மாற்றீட்டு பைகள் மயக்க மருந்துகள் அன்ரிபாயோடிக் மருந்துகளை அனுமதிக்காமல் தடை செய்தது இலங்கை அரசு. அனுமதிக்கப்பட்ட மருந்துகளை எடுத்து வரும் போது வவுனியா ஓமந்தை சோதனைச் சாவடியூடாக கொண்டுவர முடியாதபடி இராணுவம் தடுத்ததாக முல்லைத்தீவு சுகாதார சேவை அதிகாரி வரதராஜா வெளிப்படையாகவே

தொடர்ச்சி 8 ஆம் பக்கம் →

7 ஆம் பக்க தொடர்ச்சி →

## இனப்படுகொலையில்

கூறியுள்ளார். ஆபத்துக்களை எதிர்கொண்டு அத்தியாவசியமான மயக்க மருந்துகள் எப்படியோ வன்னிக்குள் கொண்டுவந்து சேர்க்கப்பட்டதால் இன்று பலர் உயிர் பிழைத்து வாழ்கிறார்கள் என்பதை இங்கு கூறியாக வேண்டும்.

வன்னிக்குள் தொண்டு நிறுவனங்களால் எடுத்துவரப்பட்ட உணவு வாகனத் தொடரணியை எறிகணைத் தாக்குதலால் தடை செய்ய முற்பட்டது இலங்கை அரசு. விசுவமடு கூட்டுறவுச் சங்கத்தின் கையிருப்பில் இருந்த உணவுச் சேமிப்பை இலக்கு வைத்து செல் தாக்குதல் நடாத்தியது. பெருமளவு அரிசிச் சேமிப்பு எரிந்து அழிந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். மேய்ச்சல் நிலங்களில் நின்ற கால் நடைகள் இலக்கு வைக்கப்பட்டுத் தாக்கியழிக்கப்பட்டதை நேரில் காண முடிந்தது. இதனால் பட்டினிச் சாவு இனவழிப்பின் உபாயமாக்கப்பட்டது.

**கேள்வி: முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டிருந்த வைத்தியசாலை மீது சிறீலங்கா இராணுவம் கனரக ஆயுதங்களைக் கொண்டு பல தடவைகள் தாக்குதல் நடத்தியிருந்தது. இந்த நடவடிக்கையானது ஒரு திட்டமிட்ட இன அழிப்பின் வடிவமாகும் என நீங்கள் கருதுகின்றீர்களா?**

சிறீலங்கா அரச சுகாதார சேவைகளின் நோயாளர் காவு வண்டிகள், தியாகி திலீபன் மருத்துவ சேவை வாகனங்கள், தமிழீழ சுகாதார சேவைகளின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு நடமாடும் மருத்துவ சேவை வாகனங்கள் போன்றவற்றின் மீது இலக்கு வைத்து கிளைமோர் தாக்குதலை நடாத்தியது இலங்கை அரசு. இதில் பல திறன்மிக்க மருத்துவ ஆளணிகள் கொன்றழிக்கப்பட்டனர். இது காயப்படுத்தப்படும் நோய்வாய்ப்படும் மக்களை காப்பாற்றிவிடாமல் தடுப்பதாகும். அத்துடன் இது தொற்று நோய்கள் பரவ வைத்து நோயால் மக்களைச் சாகடிக்கும் இனவழிப்பு யுக்தியாகும். முற்றாக ஒழிக்கப்பட்டிருந்த மலேரியா நோய்க் கிருமிகள் ஊடுருவிய இராணுவ அணிகளால் ஏதோ ஒரு வழியில் மீண்டும் வன்னிக்குள் கொண்டுவரப்பட்டது. இதனால் மலேரியா நோய் மீண்டும் ஊடுருவும் இராணுவ வழித்தடத்தில் உள்ள கிராமங்களில் இனங்காணப்பட்டது. இதனை எமது தமிழீழ சுகாதார சேவை தொற்று நோய்த் தடுப்புப் பிரிவே கண்டுபிடித்துத் தடுத்தது.

இந்த இனவழிப்பு யுக்திகள் பெரிய விளைவுகளை ஏற்படுத்திவிடாதபடி தமிழரின் சுகாதார அணிகள் ஓரணியாகி முறியடித்துக்கொண்டிருந்தன. இதன் காரணமாக பொறுமையிழந்த இலங்கை அரசு மருத்துவமனைகளை நேரடியாகத் தாக்கத் தொடங்கியது. செயற்பாட்டில் இருந்த அனைத்து மருத்துவமனைகளும் தாக்குதலுக்குள்ளாகின. செஞ்சிலுவைச் சங்கம் மருத்துவமனைகளைக் காப்பாற்றுவதற்கென ஆழ்கூறுகளை எடுத்துச் சென்று பாதுகாப்பு அமைச்சிடம் கொடுத்ததும் சில மணி நேர இடைவெளியில் அதே மருத்துவமனைகள் தாக்கியழிக்கப்பட்டன. ஒரு சந்தர்ப்பத்தில், முகட்டில் தெளிவான சிலுவைக் குறியிடப்பட்ட, நான் பணியில் நின்ற, உடையார்கட்டு பாடசாலை இடம்பெயர் மருத்துவமனை மீதும், அரசால் அறிவிக்கப்பட்ட சுதந்திரபுரம் போர் தவிர்ப்பு வலயத்தில் கூடிய மக்கள் மீதும், வீதிகளில் நெரிசலாக இடம்பெயர்ந்து கொண்டிருந்த மக்கள்மீதும் ஒரே நேரத்தில் செறிவாக்கப்பட்ட எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில் தலத்திலேயே பல நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுவிட, நூற்றுக்கணக்கானோர் எங்கள் மருத்துவமனைக்கு பாரிய காயங்களோடு கொண்டுவரப்பட்டார்கள். அந்த வேளையில் எங்கள் மருத்துவமனை தாக்கப்படுவதை தடுப்பதற்காக அரச சுகாதார சேவை அதிகாரி ஒருவர் தொலை பேசியில் அரசின் சுகாதார உயர் பீடத்துக்கு தொடர்பு கொண்டு நிலைமை பற்றிப் பேசினார். மருத்துவமனை தொடர்ந்தும் இயங்குவதைத் தெரிந்துகொண்ட அரசு மீண்டும் அடுத்த அரைமணி இடைவெளிக்குள் மருத்துவமனைக்குள் துல்லியமாகத் தாக்கியதில் மின்னியந்திரங்கள் நின்றுவிட கடமையில் நின்ற பெண் தாதி செத்து வீழ்ந்தார். காயமடைந்து வந்தவர்கள் மீண்டும் காயமடைந்தார்கள். காயக்காரர்களைக் கொண்டு வந்தவர்கள் கொல்லப்பட்டார்கள். முள்ளிவாய்க்கால் மருத்துவ மனைமீது தாக்குதல் நடத்தப்படுவதையும் மக்கள் சிதறி ஓடியதையும் வேவு விமானத்தின் துல்லியமான காணொளிக் கருவி மூலம் சனாதிபதி உட்பட படையதிகாரிகள் பார்த்துக்கொண்டே இருந்தார்களாம். இதை நான் பூசாவில் அடைக்கப்பட்டு இருந்தபோது மனம் திறந்த விசாரணை அதிகாரி ஒருவர் என்னிடமே கூறினார். இது அரசின் உயர்பீடம் திட்டமிட்டே நடத்திய கட்டமைக்கப்பட்ட இனவழிப்பாக உறுதிபடக் கூறுவேன்.

**கேள்வி: கடந்து சென்ற பத்து வருடங்களில் உங்களால் அங்கு ஏற்பட்ட துயரங்களில் இருந்து விடுபட முடிந்துள்ளதா?**

இலங்கைக் குடிமகன் ஒருவரின் உயிரைக் காப்பதற்காக (அரச இராணுவச் சிப்பாய் உட்பட) பயங்கரவாதியாக உலகால் தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மருத்துவக் குழாமில் ஒருவனாக தற்காப்பின்றி காயப்பட்டபோதும் உயிர் காக்கும் பணியில் நான் இருக்க ஒரு நூறு பேரைக் கணப்பொழுதில் கொன்று வீழ்த்தியது இலங்கைக் குடிமக்களின் அரசு. அதனை வேடிக்கை பார்த்தபடி மனிதவுரிமை பேசி முண்டு கொடுக்கிறது உலகு. இதற்காக நீதி கேட்டுப் போராடுவதிலே தசாப்தம் கடந்து முரண்பட்டுக் கிடக்கிறது தமிழரின் அமைப்பு. இந்தப் புறநிலையில் இனவழிப்புக்கு எதிராக மனித உரிமைக்காக வாழ்நாளை அர்ப்பணித்துப் போராடி அதன் தோல்வியின் நீட்சிகளைக் கண்டுணரும் கணங்கள் மேலும் கொடுமையானவை. இந்த வகையில் சொல்லப்போனால் போரில் உயிர்தப்பியதே என்போன்றவர்களுக்கு மிகவும் துரதிஷ்டமானது என்றே நினைக்கின்றேன்.



**சிறீலங்காவிலும் தமிழர் தாயகத்திலும் இன்று இடம்பெற்ற பல்வேறு அனர்த்தங்களில் உயிர்நீத்தவர்களின் குடும்பங்களுக்கு இலக்கு மின்னிதழ் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.**

# இந்த சின்னஞ்சிறிய தேசத்திலே அரசிடம் கையிலே கொடுத்த எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதே எமது கேள்வி



## திருகோணமலை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி செல்வராஜா சறோஜாதேவி

இலங்கை அரசானது தமிழர்களை காணாமல் ஆக்கப்படுவதை ஒரு போர் ஆயுதமாகவே பயன்படுத்தி வந்துள்ளது. யுத்தத்தை காரணம் காட்டி இலங்கை அரசின் முப்படைகளாலும் அவர்களின் நிகழ்ச்சி நிரலில் இயங்கிய தமிழர் விரோதக் குழுக்களாலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் பால் வயது வேறுபாடின்றி காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். முடிவடைந்த ஜெனீவா கூட்டத்தொடரிலே இலங்கைக்கு கால அவகாசம் வழங்கியதை கண்டித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மாவட்டம் தோறும் சுழற்சி முறையில் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். தற்போது திருகோணமலை மாவட்டத்திலே போராட்டத்தை முன்னெடுப்பதற்கான ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையிலே திருகோணமலை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி சரோஜினி அவர்களுடன் இலக்கு மின்னிதழுக்காக மேற்கொண்ட நேர்காணல்

***கேள்வி : உங்களுடைய புதல்வர் வலிந்து காணாமலாக்கப்பட்டமை பற்றி சுருக்கமாக கூறுங்கள்?***

பதில்: 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி காலை சாப்பாட்டை முடித்துவிட்டு வெளியே சென்றவர் பின்னர் வரவேயில்லை. அவரை படையினரோ பொலிஸாரோ கடத்தவில்லை. கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் தான் கடத்தினார்கள். அதற்கான போதிய சான்றாதாரங்கள் உள்ளன. எனது மகனை கடத்திய கருணாகுழு பின்னர் அவரை தமது அலுவலகத்தில் வைத்திருந்ததை கண்டவர்கள் என்னிடத்தில் கூறினார்கள். பொலிஸாரிடத்தில் முறைப்பாடு செய்தபோதும் நேரில் கண்டவர்கள் சாட்சியம் அளித்துள்ளார்கள். அதன் பின்னர் நானே கருணா குழுவின் அலுவலகத்திற்கு நேரில் சென்று விசாரணை செய்த போதும் அவர்கள் தமக்கு தெரியாது என்று மழுப்பலான பதிலளித்துவிட்டார்கள்.

நான் கடந்த பத்து வருடங்களாக அவரை தேடிக்கொண்டிருக்கின்றேன். இது வரையில் எவ்விதமான தகவல்களும் கிடைக்கவில்லை. இருப்பினும் வெலிக்கடைச் சிறையிலிருந்து விடுதலையான இளைஞர் ஒருவர் எனது மகனைக் கண்டதாகவும், அவர் மனநிலை பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார். அத்தகவலுடன் அவரை தேடிச்சென்றபோது அவ்வாறானவொருவர் இல்லை என்று மறுத்து விட்டார்கள். மனித உரிமைகள் ஆணைக்குழுவும் தகுந்த ஆதாரங்களின்றி நடவடிக்கைகளை எடுக்க முடியாது என்று கைவிரித்துவிட்டது. தற்போதும் எனது மகனைத் தேடிக் கொண்டும் அவன் வருவான் என்ற நம்பிக்கையுடனும் ஒவ்வொரு நாளும் காத்திருக்கின்றேன்.

***கேள்வி: திருமலை மாவட்டத்தில் எத்தனை பேர் வரையிலானவர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டுள்ளனர்?***

பதில்: எமது சங்கம் கிராமங்கள் ரீதியாக வீடுவீடாகச் சென்று மேற்கொண்ட பதிவுகளின் பிரகாரம் 500பேர் வரையிலானவர்கள் காணாமலாக்கப்பட்டுள்ளனர். எனினும் முழுமையான தரவுகளாக இதனைக் கொள்ள முடியாது. இன்னமும் எத்தனையோ பேர் பதிவுகளை மேற்கொள்ளாது இருக்கின்றார்கள். எமது சங்கத்திற்கு போதிய வசதிகள் இன்மையின் காரணத்தால் முழுமையான தகவல்களை திரட்டுவதில் பின்னடைவைக் கண்டிருக்கின்றோம். எனினும் எமக்கு கிடைக்கின்ற சிறு உதவிகளைப் பயன்படுத்தி படிப்படியாக பதிவுகளை மேற் கொள்ளும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

***கேள்வி: வலிந்து காணாமாலாக்கப்பட்டவர்களை கண்டறிவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்ற நிலைமைகள் ஏற்படுகின்றனவா?***

பதில்: எமது செயற்பாடுகளுக்கு முழுமையான அச்சுறுத்தல்கள் ஏற்படுத்தப்படாது விட்டாலும் தனிப்பட்ட ரீதியில் தலைமைப்பதவியை வகிக்கின்ற எனக்கு ஆர்ப்பாட்டங்களை எப்போது முன்னெடுக்கின்றீர்கள். அடுத்து என்ன செய்கின்றீர்கள் போன்ற விடயங்களை பெறுதற்காக புலனாய்வுப் பிரிவினர் நெருக்கடிகளை அளிக்கின்ற நிலைமைகள் இருப்பதோடு எமது ஒவ்வொரு சனநாயக முயற்சிகளையும் அவதானித்து பின்தொடரும் நிலைமை தொடர்கின்றது. இது எமது மாவட்டத்திற்கு மட்டுமல்ல வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் இதே நிலைதான்.




***கேள்வி: வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காக முன்னெடுக்கும் போராட்டங்களின் அடுத்த கட்டம் என்ன?***

பதில்: தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். மார்ச் மாதம் ஜெனீவாவில் இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்க கூடாது என்று கோரியும் வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களுக்கு நீதிவழங்க சர்வதேசம் பொறுப்பேற்று உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் பாரிய போராட்டத்தினை மேற்கொண்டிருந்தோம். இதன் நீட்சியாக மட்டக்களப்பிலும், முல்லைத்தீவிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் திருமலையிலும் பாரிய போராட்டமொன்றினை எதிர்வரும் 27 ஆம் திகதி முன்னெடுக்கவுள்ளோம். எமக்கான நீதி கிடைக்கும் வரையில் நாம் போராட்டங்களை கைவிடப்போவதில்லை. சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் வரையில் அதற்கான அழுத்தங்களை வழங்கி எமது போராட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

***கேள்வி: இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கக் கூடாது என்று நீங்கள் போராட்டங்களை மேற்கொண்டபோதும் சர்வதேசம் மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கியுள்ளதே?***

பதில்: சர்வதேச சமூகம் எமது கோரிக்கைகளுக்கு மாறாக செயற்பட்டமையை இட்டு நாம் மிகவும் மனம் வருந்துகின்றோம். எமது உறவுகள் காணாமலாக்கப்பட்டுள்ளனர், சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த விடயங்களில் இலங்கை அரசாங்கம் நீதியாக நடந்துகொள்ளாது என்பது நன்கு அறியப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கமும் அதனை பகிரங்கமாக கூறுகின்றது. இவ்வாறான நிலையில் நாங்கள் சர்வதேசத்திடமிருந்தே நீதியை எதிர்பார்க்கின்றோம். அப்படியிருக்க இந்த சர்வதேசமே இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கியமையானது துரதிஷ்டவசமான செயற்பாடாகும். யுத்தம் நிறைவடைந்து பத்து வருடங்களாகின்றன. இன்னமும் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. தமிழர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அச்சமான சூழலில்த்தான் வாழ்க்கின்றார்கள் என்ற புரிதலை சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தற்போதும் கூட சர்வதேசத்தின் ஊடாகத்தான் எமக்கான நீதி உள்ளது என்று நம்பிக்கையில் இருக்கின்றோம்.

***கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையானது திருமலை மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்துவதாக உள்ளது. ஒவ்வொரு பாராளுமன்றத் தேர்தல்களிலும் அம்மாவட்ட மக்களின் ஆணையைப் பெறுகின்றது. அவ்வாறிருக்க அத்தலைமையுடன் அம்மாவட்டத்தின் பிரசைகள் காணாமல் போயுள்ளமை தொடர்பில் கலந்துரையாடினீர்களா? அப்போது என்ன பதில் அளிக்கப்பட்டது?***

பதில்: திருமலை மாவட்ட தமிழ் மக்களின் வாக்குகளை பெற்று பாராளுமன்றம் போனவர் என்ற அடிப்படையில், அவருடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் சந்திப்புக்களை நடத்தியிருந்தோம். எமது கருத்துக்களையும், கோரிக்கை களையும் முன்வைக்கின்றபோது அதற்கு அவர் ஒருவார்த்தை கூட பொறுப்புடன் பதிலளிப்பது

தொடர்ச்சி 11ஆம் பக்கம் →

# தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் மாறுபடும் ஐ.நா அளவுகோல்

**சுடரவன்**

இன்று மனித சமூகம் போர்கள், ஆயுத மோதல்கள், வன்முறைகள் அற்ற ஒரு உலகை காணத்தவிக்கிறது. ஆகக்குறைந்தது போர்கள், மோதல்களின் போது பேரழிவு ஆயுதங்களால் பாரிய உயிரழிவுகள் ஏற்படுவதைத் தடுக்கவேண்டும் என்ற நோக்குடன் முயற்சிகள் மேற்கொள்கின்றன. அதிலும் குறிப்பாக அப்பாவிப் பொதுமக்களை இத்தகைய தாக்குதல்களில் இருந்து காப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்ற முனைப்பு மேலோங்கியுள்ளது.

போர்கள், மோதல்கள் நடைபெறும் போது பொதுமக்களை பாதுகாக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள், கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றி பன்னாட்டு நடைமுறை மரபுகள் மற்றும் உடன்படிக்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. இவை அழிவுத் தவிர்ப்புக்கான வழிகாட்டு கோவைகளாக மட்டுமன்றி குற்றமிழைப்பவர்களை நீதியின் முன் நிறுத்தக் கூடியவையாகவும் அமைகின்றன. இந்த வகையில் இரசாயன, உயிரியல் மற்றும் கொத்துக்குண்டுப் பாவனை என்பன மிகவும் பாரதூரமான மானுடத்திற்கெதிரான குற்றச் செயல்களாகவே கொள்ளப்படுகின்றன.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை அப்பாவித் தமிழ்மக்கள், சிறிலங்காவின் பேரழிவு ஆயுதங்களால் குறிவைத்துக் குதறப்பட்டபோது அதைத் தடுப்பதற்கு யாரும் முயலவில்லை. தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் பேசப்படுகின்ற நிலைமையிலும் அதற்கான ஆதாரங்கள் முன்வைக்கப்படும் நிலையிலும் நீதிக்கான எந்த முன்நகர்வுகளும் இடம்பெறவில்லை.

அண்மைக்காலத்தில் சிரியாவில் தடைசெய்யப்பட்ட ஆயுதப்பாவனை தொடர்பில் செய்திகள் வந்தவுடனேயே ஐ.நா உள்ளிட்ட அனைத்துலக அமைப்புகள் வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் குதித்தன. ஐ.நா வின் வேதியியல் ஆயுதங்களை தடைசெய்வதற்கானஅமைப்பின் (OPCW-Organisation for the Prohibition of Chemical Weapons) கண்காணிப்பாளர்கள் உண்மை கண்டறியும் நடடிக்கைக்காக



அனுப்பிவைக்கப்பட்டனர். அங்கு நடைபெற்ற பரிசோதனை நடவடிக்கையில் சிரிய அரசபடைகளால் தடைசெய்யப்பட்ட வேதியல் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரியவருவதாக அவர்கள் அறிக்கையிட்டனர். இதனடிப்படையில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும் என பலதரப்பிலுமிருந்தும் பலமான கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன.

இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் சிறிலங்கா தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை பயன்படுத்தியது என்பதை உரத்துப் பேசும் தரப்புகளை, அதற்கான நீதி வழங்கப்படவேண்டும் என முயற்சிகளை மேற்கொள்ளும் தரப்புகளை காணமுடியவில்லை. தத்தமது சொந்த நலன்களை பொறுத்தே 'மனிதவுரிமை' பேசும் இன்றைய உலகில் பாதிக்கப்பட்ட தரப்பினர் தமக்கான குரலை ஓங்கி ஒலிக்கவேண்டியது கட்டாயமாகிறது.

தடைசெய்யப்பட்டுள்ள ஆயுதங்களை சிறிலங்கா பயன்படுத்தியுள்ளது என்பதை ஐ.நாவின் அபிவிருத்தி அமைப்பின் கண்ணிவெடிகள் தொடர்பான நடவடிக்கைக்குழு ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தியிருந்தும் இன்றுவரை இவ்விடயம் கண்டுகொள்ளப்படாமல் இருப்பது ஐ.நாவின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கி நிற்கிறது.

ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) கண்ணிவெடிகள் தொடர்பான தொழில்நுட்ப ஆலோசகர் அலன் போஸ்டன் (Allan Poston) சிறிலங்காவின் கொத்துக் குண்டு பாவனை தொடர்பில் ஐ.நாவுக்கு தகவல் தந்திருந்தார். கிடைக்கப்பெற்ற ஒளிப்படங்கள் மற்றும் சிதறு துண்டுகளை ஆராய்ந்ததில்த்தான் இந்த முடிவிற்கு வருவதாக அவர் குறிப்பிட்டிருந்தார். ("After reviewing additional photographs from the investigation teams, I have determined that there are cluster sub-munitions in the area") அங்கு கண்டெடுக்கப்பட்ட கொத்துக்குண்டின் பகுதிகள் ரசியத் தயாரிப்பான RBK-500_AO-2,5RT_aerial cluster bomb வகையைச் சார்ந்தவை எனவும் UNDP வல்லுநர்கள் உறுதி செய்திருந்தனர்.

தமிழர் தரப்பால் கொத்துக்குண்டுகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட போதெல்லாம் அதனை சிறிலங்கா மறுதலித்து வந்தது. ஐ.நாவின் பிரதிநிதிகள் அதனை ஆதாரத்துடன் உறுதி செய்த வேளையிலும் கூட சிறிலங்கா அதனை முற்றாக நிராகரித்தது. தங்களிடம் இல்லாத, தாம் ஒருபோதும் கொள்வனவு செய்யாத குண்டை எப்படி வீச முடியும் என ஏளனமும் செய்தது.

ஆனால் சிறிலங்கா கொத்துக்குண்டுகளை பாக்கிஸ்தானில் இருந்தும் கொள்வனவு செய்திருப்பதை, அந்நாட்டின் ஆயுத ஏற்றுமதி அமைப்பின் இயக்குனர் மேஜர் ஜெனரல் முஹமட் பாரூக் உறுதி செய்திருந்தார். அவர் 2008 யூலை பாகிஸ்தானிய டோன்(Dawn) செய்த்தித்தாளுக்கு வழங்கிய செவ்வியில் இதைத் தெரிவித்திருந்தார். (It has been reported that Sri Lanka has purchased cluster bombs, deep penetration bombs and rockets and UAVs from Pakistan)

இது தவிர சிறிலங்கா தரப்பால் வன்னியில் தமிழர்கள் மீது வேதியல்




ஆயுதங்கள் பிரயோகிக்கப்பட்டமை தொடர்பிலும் ஆதாரங்களையும் நாம் கண்டுகொள்ள முடியும். சிறிலங்கா அரசால் பரவலாக பயன்படுத்தப்பட்ட ரசியத்தயாரிப்பு ஆயுதமான RPO-A Shmel thermobaric rocket launcher மிக ஆபத்தான வேதியல் ஆயுதமாகும். சிவிலியன் இலக்குகளுக்கு மிகுந்த பாதிப்பைத் தரும் என்ற வகையில் இவ்வாயுதம் பொதுவாக தடை செய்யப்பட்டதொன்றாகக் கொள்ளப்படுகிறது.

சிறிலங்கா அரசாங்கம் இதனை உக்கிரேன் நிறுவனமொன்றிடமிருந்து இரசிகமாக கொள்வனவு செய்திருந்தது. இந்த கொள்வனவில் இடம்பெற்ற ஊழல்கள் காரணமாக இந்த விடயம் வெளிச்சத்திற்கு வந்தது. இதனால் அதனை ஏற்றே ஆகவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட சிறிலங்கா படைத்துறை அவை காலாவதியானவை எனக்கூறி சமாளிக்க முயன்றது.

ஆயினும் இத்தகைய ஆயுதங்கள் சிறிலங்கா படைகளால் வன்னியில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டமை வெளிப்படை. பயன்படுத்தப்பட்ட வெற்று எறிகணைத்தொகுதிகள் பல அங்கு கண்டெடுக்கப்பட்டிருந்தமை இதற்குச் சான்றாகும். இந்த ஆயுதத்தில் உள்ள எரிபொருள்வேதியல் கலவையானது (FAE fuels) மிகவும் நச்சுத் தன்மையானது. இந்த வெடிபொருள் மிகமோசமான எரிகாயங்களை ஏற்படுத்துவதுடன் , இதனை சுவாசிப்பதாலும் மிக ஆபத்தான விளைவுகள் ஏற்படுகின்றன.

மேலும் இறுதிக்கட்ட போரின் போது வன்னியில் பணியாற்றிய வைத்தியர்களின் குறிப்புகளும், 'சாட்சியங்கள் இல்லாத போர்' (War Without Witness)அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்ட சுயாதீனமான விசாரணையின் முடிவுகளும் இரசாயன ஆயுதப் பயன்பாட்டை அறிவியல் ரீதியில் நிரூபித்து நிற்கின்றன.

சிறிலங்காப் படையினரால் வேதியல் ஆயுதங்கள் பயன்படுத்தப் பட்டமையும் அதனால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டமையும் ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. இந்த ஆரம்பகட்ட முடிவுகள் இங்கிலாந்தின் அனுபவம் வாய்ந்த

தொடர்ச்சி 11ஆம் பக்கம் →

9 ஆம் பக்க தொடர்ச்சி →

## இந்த சின்னஞ்சிறிய தேசத்திலே

கிடையாது. நாங்கள் பார்த்துக்கொள்கின்றோம். பாராளுமன்றத்தில் பேசுகின்றோம் என்று தான் கூறுகின்றாரே தவிர ஆக்கபூர்வமான எவ்விதமான பதிலையும் நடவடிக்கையையும் அவர் தருவதில்லை. பாராளுமன்றத்தில் இத்தனை வருடங்கள் பேசியமையால் என்ன பயன் கிடைத்துள்ளது. எதுவுமே கிட்டவில்லை. எந்தவிதமான தீர்வும் முன்வைக்கப்படவில்லை. காணாமல்போனவர்கள் விசாரணையை முன்னெடுப்பதில தாமதங்கள் இருக்கின்றது என்றால் குறைந்தது சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையாவது விடுவிக்கப்பட்டிருக்கலாம், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டிருக்கலாம். இவை எதுவுமே நடைபெறவில்லையே. இந்த நிலையில் அரசியல்வாதிகளால் எமது கோரிக்கைக்கான கதவு திறக்கப்படும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்.

***கேள்வி: தற்போது வலிந்து காணாமலாக்கப்பட்ட அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. காணாமலாக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவித்தொகை வழங்குவதற்கு முயற்சிக்கப்படுகின்றது. இதனை விட காணாமலாக்கப்பட்ட தற்காலிக சான்றிதழ், மரணச் சான்றிதழ் என்பன வழங்குவதற்குரிய தயார்படுத்தல்களும் நடைபெறுகின்றன. இழப்பீட்டு பணியகத்தினை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப் படுகின்றன. இந்த விடயங்களை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?***

பதில்: முதலாவதாக காணாமலாக்கப்பட்ட அலுவலகத்தினை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். அந்த அலுவலகத்தினால் எவ்விதமான நன்மைகளும் இல்லை என்பதே உறவுகளை பறிகொடுத்த தாய்மார்களின் நிலைப்பாடாக இருக்கின்றது. அதேநேரம் அந்த அலுவலகத்தால் ஆறாயிரம் ரூபா உதவித்தொகை வழங்கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது. அப்படியென்றால் நாளொன்றுக்கு 200 ரூபா தான் கிடைக்கும். இதனை வைத்து ஒருநபராவது பசியாற முடியுமா? எனது பிள்ளை இருந்திருந்தால் ஆகக்குறைந்தது மேசன் வேலைக்காவது சென்று நாளொன்றுக்கு இரண்டாயிரம் ரூபா சம்பாதித்திருப்பான். நான் உட்பட எந்தவொரு தாயினது பிள்ளையினதும், கணவரினதும் வருமானத்தினை இந்த அலுவலகங்கள் நிர்ணயிக்கவும் முடியாது. அவர்களின் உழைப்பினை அரசாங்கத்தினால் பூர்த்தி செய்யவும் முடியாது.

மேலும் தற்காலிக காணாமலாக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் மரணச்சான்றிதழ் பற்றி பேசப்படுகின்றது. எமது பிள்ளைகளை நாங்கள் தான் பிடித்தோம். அவர்களை கொலை செய்துவிட்டோம். இல்லை காணாமலாக்கச்செய்து விட்டோம் அவர்கள் தற்போது இல்லை. அதற்கு நாமே தான் காரணம் என்று அரசாங்கம் உரியவர்களை சுட்டிக்காட்டி சான்றிதழ் வழங்குவதற்கு தயாராகவுள்ளதா? அவ்வாறு உரியவர்களை சுட்டிக்காட்டி சான்றிதழ் வழங்குவதற்கு தயாராக இருக்குமாகவிருந்தால் நாமும் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு தயாராகவே இருக்கின்றோம். எமது பிள்ளைகள் வீட்டிலிருந்து இறந்திருந்தால் நாம் கிராம சேவகரிடத்திலேயே மரண சான்றிதழைப் பெற்றிருப்போம். ஆனால் இவர்களே கூட்டிச் சென்று காணாமலாக்கிவிட்டு எவ்வாறு மரணச்சான்றிதழை வழங்க முடியும். எமக்கு எமது பிள்ளைகள் வேண்டும். அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய வேண்டும். அதன் பின்னர் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும். இதனைத்தான் நாம் உறுதியாக சர்வதேசத்திடத்தில் முன்வைக்கின்றோம். மேலும் இழப்பீட்டு பணியகம் எல்லாம் உள்நாட்டில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களையும் சர்வதேசத்தினையும் ஏமாற்றும் செயற்பாடாகும்.

***கேள்வி: திருகோணமலையில் ஒருங்கிணைக்கப்படும் ஆர்ப்பாட்டம் பற்றி கூறுங்கள்?***

பதில்: ஐந்து பல்கலைக்கழக மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட இடத்திலிருந்து ஆரம்பித்து பேரணியாகச் சென்று திருமலை மனித உரிமைகள் கண்காணிப்பகத்தில் கோரிக்கை மனுவை கையளிக்க தீர்மானித்துள்ளோம். மேலும், இந்த ஆர்ப்பாட்டத்தினை ஒழுங்குபடுத்துவதில் சில சிரமங்களை எதிர்நோக்குகின்றோம் குறிப்பாக வெளிமாவட்டத்திலிருந்து வருகை தருபவர்களுக்கான போக்குவரத்து, உணவு, தங்குமிட வசதிகளை வழங்குவதில் சில சிரமங்கள் இன்னமும் நீடித்தவாறே உள்ளது. இதற்கான உதவிகளையே நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

10 ஆம் பக்க தொடர்ச்சி →

## தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள்

வைத்தியர் ஒருவரால் மறுசீராய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மருத்துவ மற்றும் வேதியல் அறிக்கையின்படி காயங்களில் Triethanolamine (C6H15NO3), Phosgene (CCl2O) போன்ற வேதியல் பொருட்கள் காணப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் வெண் பொஸ்பரஸ்(White phosphorous ) பயன்பாடு தடைசெய்யப்பட்ட தொன்றாகும். ஆனால் வன்னியில் இந்த வேதியல் பொருள் சிறிலங்கா படையினரால் பயன்படுத்தப்பட்டமை அப்போது செட்டிகுளத்தில் பணியாற்றிய பிரான்ஸ் நாட்டு வைத்தியர்களால் அறிக்கையிடப்பட்டுள்ளது. (*Tamil civilians who escaped the Sri Lankan military bombardment, treated by French doctors, included those with injuries from phosphorous bombs, AFP reported*)

இவைதவிர சிறிலங்காவின் 'உண்மை கண்டறியும்' ஆணைக்குழுமுன் சாட்சியமளித்த பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பலர் இவ்வாறான தடைசெய்யப்பட்ட ஆயுதப் பயன்பாடு பற்றி தங்கள் முறைப்பாடுகளை பதிவுசெய்துள்ளார்.

மேற்கண்ட விடயங்களின் அடிப்படையில் சிறிலங்காவை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தவேண்டிய தார்மீகக் கடமையிலிருந்து அனைத்துலக சமூகம் விலகி நிற்பது வியப்பளிக்கிறது. தானே கண்டறிந்த ஆதாரங்கள் கூட கண்முன்னே இருக்க, ஐ.நா ஏன் இன்னும் ஒரு நீதி விசாரணையினை முன்னெடுக்காமல் இருக்கிறது என்பது பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தும் ஒன்றாகவே உள்ளது.

தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை சிறிலங்கா தமிழ் மக்களுக்கு எதிராக பயன்படுத்தியமை தொடர்பில் போதுமான விழிப்புணர்வுகள், வெளிப்படுத்தல்கள் எம்மவர் மத்தியில் இல்லாமல் இருப்பது மிக வேதனையான விடயமே. இறுதிக்கட்ட போரின்போது வன்னியில் வாழ்ந்த சராசரி மனிதன் ஒவ்வொருவருக்கும் இத்தகைய ஆயுதங்கள் தொடர்பான முதல்தர பட்டறிவு இருக்கும். அவற்றை அறிவியல் ரீதியில் ஆவணப்படுத்துவது அவர்களுக்கு இலகுவான விடயமல்ல. இந்த கொடூர நடவடிக்கைகளை உரியமுறையில் ஆவணப்படுத்தி அறிவியல்ரீதியான நிறுவல்களுடன் அனைத்துலக சமூகத்துக்கு கொண்டுசெல்லவேண்டிய பொறுப்பு எமது சமூகம் சார்ந்த ஆர்வலர்கள், புத்திஜீவிகள், துறைசார் வல்லுநர்களையே சாரும்.

இந்த விடயத்தில் தமிழ் சமூகம் காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுக்காத பட்சத்தில் சிறிலங்காவின் தமிழர் இனப்படுகொலை தொடர்பில் வலிமையானதொரு துருப்புச்சீட்டை நாம் இழந்துவிடும் நிலைமை தவிர்க்க முடியாததாகிவிடும்.

## மோடி, பாக் வெளிவிகார அமைச்சர் ரணிலுடன் தொலைபேசியில் பேச்சு

இந்தியப்பிரதமர் நரேந்திரமோடி மற்றும் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷி ஆகியோர் தொலைபேசி ஊடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தொடர்பு கொண்டு தற்போதைய நிலைமைகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது, இந்திய பிரதம்ர் மோடி கூறுகையில், இந்தியா இலங்கைக்கான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்க தயாராக இருப்பதோடு பிராந்தியத்தில் அமைதியையும் சமாதானத்தினையும் நிலைநாட்டுவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு என்றும் ஆதரவாக இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டதோடு முழுமையான ஆதரவினை வழங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## சிறிலங்கா முழுவதும் உடனடியாக காலவரையற்ற ஊரடங்கு

சிறிலங்கா முழுவதும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் காவல்துறை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக, சிறிலங்கா காவல்துறை மா அதிபர் பூஜித ஜெயசுந்தர அறிவித்துள்ளார்.

முன்னதாக, இன்று மாலை 6 மணி தொடக்கம், நாளை காலை 6 மணி வரை ஊடரங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். என்று சிறிலங்கா அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும், நாட்டின் பாதுகாப்பு நிலையைக் கருத்தில் கொண்டு உடனடியாக காவல்துறை ஊடரங்குச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளதாக, காவல்துறை தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த ஊரடங்குச்சட்டம் எப்போது நீக்கப்படும் என்று அறிவிக்கப்படவில்லை. மறு அறிவித்தல்வரை ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும்.

# முள்ளிவாய்க்கால்

## தீபச்செல்வன்

சில காலம் முல்லைத்தீவு மாவட்டத்தில், விவசாயப் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றினேன். தினமும் கிளிநொச்சியிலிருந்து முல்லைத்தீவுக்குச் செல்வேன். அக்காலத்தில் என் பொழுது ஒவ்வொரு நாளும் முள்ளிவாய்க்காலில்தான் விடியும். ஒவ்வொரு நாளும் முள்ளிவாய்க்காலில் கண்கள் எதனையோ தேடிக் கொண்டிருக்கும். எல்லோருடைய முகங்களும் சுற்றி சுற்றி முள்ளிவாய்க்காலை பார்க்கும். எங்கள் ஒவ்வொருவரது மனங்களும் முள்ளிவாய்க்காலில்தான் அலைந்து கொண்டிருக்கிறது என்று நினைத்து கொள்வேன்.

முள்ளிவாய்க்கால் ஈழத் தமிழர்களால் எந்த யுகத்திலும் மறக்க முடியாத இனப்படுகொலை நிலம். ஈழத் தமிழ் இனத்தின் போராட்டத்தை மாத்திரமல்ல, வாழ்வையும் முழு மனதையும் கலைத்துப்போட்ட கொடுஞ்செயல் இவ் இனப்படுகொலை. முள்ளிவாய்க்காலைச் சுமந்திருக்கும் முல்லைத்தீவு மாவட்டம் இலங்கையிலேயே மிகவும் பின்தங்கிய வறிய மாவட்டம். ஐ.நாவின் தரங்கணிப்பில்கூட இந்த விடயம் சொல்லப்பட்டிருக்கிறது. இயற்கையாகவே வரட்சி மிகுந்த இந்த மாவட்டத்தின் உயிர்ப்பை எல்லாம் போர் முழுவதுமாய் தின்று தீர்த்திருக்கிறது.

அங்கு பணியாற்றிய காலத்தில், ஒரு சில தடவைகள் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலைக்குச் சென்றிருக்கிறேன். முள்ளி வாய்க்காலின் பின்னர்



வைத்தியசாலைகளில் குழந்தைகள்தான் நோயாளியாக நிறைந்திருக்கிறார்கள். அவர்கள் மாதாந்தம் தங்கள் உடலை பரிசோதித்துக் கொள்ள வைத்தியசாலைக்கு வருவார்கள். முல்லைத்தீவு வைத்திய சாலையில் அதிகம் தொற்றாநோயிற்குரிய மருத்துவத்தை பெறுவதற்கு வரும் குழந்தைகளைத்தான் காண்பதுண்டு. முள்ளி வாய்க்காலின் பேரழிவைத்தான் அக்குழந்தைகள் சுமந்திருக்கிறார்கள்.

நான் கற்பிக்கும் பாடசாலையில் எனது மாணவன் ஒருவன் ஒருநாள் திடீரென மயக்கமுற்றான். அவனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பரிசோதித்தபோது அவனுடைய சிறுநீரகங்கள் செயலிழந்து இருந்தன. கிட்டத்தட்ட ஒரு வருடமாக வைத்தியசாலையில் இருந்து மருத்துவம் செய்து கொண்டான். ஒரு நாள் மீண்டும் வகுப்பறைக்கு வந்தான். தேகமெல்லாம் உடைந்து போயிருந்தது. அவனுடைய மலர்ச்சியான அந்தப் புன்னகை மாத்திரம் அவனை விட்டு அகலவே இல்லை. மரணத்திற்காக காத்துக் கொண்டிருப்பதை அவன் அறிந்துதான் இருப்பான்? ஒரு குழந்தை மரணத்திற்காக காத்திருப்பது எவ்வளவு கொடுமை?



இன்னொரு வகுப்பில் ஒரு மாணவி மாதத்தில் ஒரு நாள் பாடசாலைக்கு வராமல் நின்றுவிடுவாள். நேற்று ஏன் பாடசாலைக்கு வரவில்லை என்றேன். "பிறசர் கிளினிக் போயிருந்தன் சேர்…" என்றாள். போரில் தந்தையை இழந்த அவள் எப்போதும் அழுத்தம் மிகுந்திருப்பாள். தந்தை மகனுக்கு எழுதிய கடிதம் என்றொரு பாடத்தை கற்பித்த போது, எனக்கு அப்பா இல்லையே என்று அழுதுவிட்டாள். முள்ளிவாய்க்கால் போர் இப்படித்தான் ஒவ்வொரு மனிதர்களையும் பின் தொடர்கிறது.

நீரிழிவு நோய், இரத்த அழுத்தம், சிறுநீரக பாதிப்பு என்று குழந்தைகள் தொற்றா நோய்களுக்கான மருத்துக் குறிப்பேடுகளுடன் வைத்தியசாலையில் அமர்ந்திருக்கின்றனர். மாதா மாதம் ஒருநாள் பாடசாலையில் மருத்துவ விடுமுறை எடுத்துக் கொள்கிறார்கள். முள்ளிவாய்க்காலில் பிறந்தவர்களும் முள்ளிவாய்க்காலுக்கு சில வருடம் முந்திப் பிறந்தவர்களும் இப்போது பிறப்பவர்களும்கூட இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர். முள்ளிவாய்க்கால் யுத்தம் இன அழிப்புக்கானது என்பதை நம்மில் பலரும் அதிகமும் பேசி வருகிறோம்.

முள்ளிவாய்க்காலுடன் யுத்தம் முடிந்துவிட்டதா? முள்ளிவாய்க் காலுக்குப் பின்னர்தான் பெரும் யுத்தம் நடக்கிறது. எல்லாப் போர்களும் கண்ணுக்குத் தெரிவதில்லை. ஈழத் தீவில் இருந்து தமிழ் மக்களை எல்லா விதத்திலும் ஒழித்துக் கட்டுவதற்கான வேலை மிகவும் திட்டமிடப்பட்ட ரீதியில் நடக்கின்றது. போருக்குப் பின்னர், வன்னி நிலமே குலைத்துப் போடப்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகளின் காலத்தில் கடுமையான பொருளாதார தடையிலும் மக்கள் தன்னிறைவுடன் இருந்தார்கள். அவர்களுக்கு வேலை இருந்தது. கட்டமைப்பான வாழ்வு இருந்தது.

புலிகள் இல்லாத ஈழம் என்பதை விட, புலிகள் அமைத்திருந்த ஈழம் 2009 இற்குப் பின்னர் இருக்கக்கூடாது என்பதும் அந்த ஈழ அமைப்பே ஈழத் தமிழர்களை மீண்டெழச் செய்யும் என்று கருதியே ஈழம் நாடழிப்பு செய்யப்பட்டது. இன அழிப்பு எவ்வாறு திட்டமிடப்பட்டதோ, அதைப் போலவே நாடழிப்பும் திட்டமிடப்பட்டது. அதில் எங்கள் வாழ்வு, பண்பாடு, நினைவுகள், தொன்மைகள், பொக்கிசங்கள் யாவும் அழிக்கப்பட்டன. இப்போது அமைக்கப்பட்டுள்ள நாடு ஏதோ ஒரு விதத்தில் எம்மை அழித்துக் கொண்டிருக்கிறது.

ஈழத்தில் பெண்களை இலக்கு வைத்து பல்வேறு இன அழிப்புச் செயல்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கட்டாய கருத்தடை மகிந்த ராஜபக்ச காலத்தில் பலவந்தமாக செய்யப்பட்டு மாபெரும் பிரச்சனைகள் ஏற்பட்டன. இப்போதும் பெண்கள் குழந்தைகளை பெற்றுக்கொள்ளும் விகிதத்தை குறைப்பதற்கான திட்டமிட்ட செயல்கள் நடக்கின்றன. ஈழத்தில், நுண்கடனால் பாதிக்கப்பட்ட பெண்கள் சுமார் இருநூறுபேர் வரையில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். நிறையக் குடும்பங்கள் நுண்டன் காரணமாக சிதறுண்டு போயிருக்கின்றன.

முன்னாள் போராளிகளின் மர்ம மரணங்கள் இன்னொரு புறத்தில் இனத்தை அழித்துக் கொண்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினியுடன் சுமார் 150 முன்னாள் போராளிகள் மரணமடைந்துள்ளனர். இந்த நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், புற்றுநோய் போன்ற நோய்களினால் முன்னாள் போராளிகள் மரணிக்கின்றனர். போராட்ட காலத்தில் கடும் உடல் வலுவை கொண்டிருந்த தனக்கு இப்போது சிறிய பாரத்தைக்கூட தூக்க முடியவில்லை என்று இலங்கை அரச ஆணைக்குழு முன்பாக, முன்னாள் போராளி ஒருவர் சாட்சியம் அளித்திருந்தார். போராளிகளுக்கு விச ஊசி ஏற்றப்பட்டதா என்ற சந்தேகம் வலுத்து வருகின்றது.

அண்மையில் ஈழப் பத்திரிகை ஒன்றில் இரண்டு செய்திகள் வெளியாகியிருந்தன. இலங்கை அரசு சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிக்கு அமைய, வடக்கில் இராணுவத்தின் வசமிருந்த சில காணிகள் விடுவிக்கப்பட்டிருப்பதாக ஒரு செய்தி. வடக்கில் எல்லைப் பகுதியில் தமிழ் கிராமங்களுக்கு பெயர் மாற்றி சிங்கள மக்கள் குடியேற்றம் என்று மற்றொரு செய்தி. குழந்தைகள், பெண்கள், முன்னாள் போராளிகள், நிலம் இவை யாவற்றின்மீதும் தொடரும் இவ் யுத்தம் கண்ணுக்குத் தெரியாமல் நடந்து கொண்டிருக்கிறது. முள்ளிவாய்க்காலுக்குப் பின் பத்தாண்டுகளிலேயே இத்தனை அழிப்பும் இழப்புமெனில், வரும் காலம் எப்படி இருக்கும்? இதுதான் ஐந்தாம் கட்ட ஈழப்போர். இந்தப் போரிற்கு எதிராக ஈழத் தமிழினம் போராடியாக வேண்டிய நிர்ப்பந்தம்.



# உயிர்களைக் குடிக்கும் காற்று மாசு

காற்று மாசினால் மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்து ஆய்வு செய்ததில், சுத்தமற்ற காற்றால் இதயநோய், சுவாசக் கோளாறுகள், நாள்பட்ட சுவாச நோய்கள் மற்றும் புற்றுநோய் வரலாம் என்று கூறப்படுகிறது.அதிகரித்து வரும் காற்று மாசினால், உயிரிழப்போரின் எண்ணிக்கை கூடியிருக்கிறது.

உலகளவில் காற்று மாசின் காரணமாக கடந்த 2017-ம் ஆண்டு மட்டும் 49 லட்சம் பேர் உயிரிழந்துள்ளதாக ஓர் ஆய்வறிக்கை கூறுகிறது. அசுத்தக் காற்று நம் ஆயுட்காலத்தை சராசரியாக ஓராண்டு எட்டு மாதங்கள் வரை குறைக்கும் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுகாதார தாக்கங்களை ஆய்வு செய்யும் ஒரு நிறுவனம், செயற்கைக்கோள் கருவிகளைப் பயன்படுத்தி, சுமார் 10 ஆயிரம் கண்காணிப்புக் கருவிகளை வைத்து காற்று மாசு குறித்த தரவுகளைச் சேகரித்தது. அவற்றை, காற்று மாசினால் ஏற்பட்ட தாக்கங்களின் ஆதாரங்களோடு ஒப்பிட்டு, 2017-ம் ஆண்டில் சுத்தமற்ற காற்றால் எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்பதைக் கணக்கிட்டது. அந்த அறிக்கையில், உலகளவில் அதிக கேடுகளை விளைவிக்கும் நோய்கள் குறித்துப் பட்டியலிடப்பட்டது.

அப்பட்டியலில் காற்று மாசு ஐந்தாவது இடத்தில் உள்ளது. உணவுமுறை, உயர் ரத்த அழுத்தம், புகை பிடித்தல் மற்றும் சர்க்கரை நோய் முதல் நான்கு இடங்களிலும், உடல் பருமன் ஆறாவது இடத்திலும் உள்ளன. காற்று மாசினால் மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்து ஆய்வு செய்ததில், சுத்தமற்ற காற்றால் இதயநோய், சுவாசக் கோளாறுகள், நாள்பட்ட சுவாச நோய்கள் மற்றும் புற்றுநோய் வரலாம் என்று கூறப்படுகிறது.

உலகளவில் காற்று மாசினால் மனித ஆயுட்காலம் 20 மாதங்கள் குறைவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனால், தெற்காசியாவில் இது மிகவும் மோசமாக உள்ளது. இப்பகுதியில் பிறக்கும் குழந்தைகள், காற்று மாசினால் தங்கள் வாழ்க்கையில் 30 மாதங்களை இழக்கக்கூடும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

காற்று மாசினால் மட்டும் இங்கு ஆயுட்கால விகிதம் குறைகிறது என்று கூறிவிட முடியாது. தெற்காசிய நாடுகளில் இதனைக் கட்டுப்படுத்த போதிய சுகாதார அமைப்புகள் இல்லை என்பதும் ஒரு காரணம். சுத்தமற்ற காற்றைச் சுவாசிப்பது, டைப் 2 நீரிழிவு நோயை உண்டாக்கும் மூன்றாவது பெரிய காரணியாக உள்ளது.

இது தொடர்பாக அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் காற்று மாசுக்கும், நீரிழிவு நோய்க்கும் தொடர்பு இருப்பது தெரியவந்தது.

ஆனால், இது எப்படி நிகழ்கிறது என்பது இன்னும் தெளிவாகத் தெரிய வரவில்லை. எனினும், காற்று மாசினால் நுரையீரலில் வீக்கம் ஏற்படுவது பலருக்கும் தெரிந்த ஒன்றுதான். அது உடலின் மற்ற அமைப்புகளுக்குப் பரவக்கூடும். இன்சுலின் உற்பத்தியில் ஈடுபடும் செல்கள் வீக்கமடைந்து, உடலில் சர்க்கரையைக் கட்டுப்படுத்தும் இன்சுலினை பாதிக்கும் என்று ஒரு கோட்பாடு முன்வைக்கப்படுகிறது. வெளிப்புற காற்று மாசு தவிர, வீட்டுக்குள் நிலவும் காற்று மாசும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. வீட்டில் ஏற்படும் காற்று மாசுபாட்டால் 2017-ம் ஆண்டில் சுமார் 16 லட்சம் பேர் முன்கூட்டியே உயிரிழந்திருக்கிறார்கள்.

சமைக்க அல்லது குளிர்காலங்களில் தங்களை வெப்பமாக வைத்திருக்க திட எரிபொருட்களை எரிப்பதால் இது பொதுவாக நிகழ்கிறது. இந்தியாவில் 84.6 கோடி மக்களும், சீனாவில் 45.2 கோடி மக்களும் இந்தக் காற்றைச் சுவாசித்துள்ளனர். ஆனால், திட எரிபொருட்களில் மக்கள் சமைப்பதைக் குறைக்க, இந்தியாவும் சீனாவும் பல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றன. அதேநேரம் ஆப்பிரிக்கா போன்ற கண்டங்களில், 70 சதவீதத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் உணவைச் சமைக்க திட எரிபொருட்களையே இன்னும் பயன்படுத்துகின்றனர். சுத்தமற்ற காற்றால் பொதுவாக வயதானவர்கள்தான் அதிகம் உயிரிழக்கின்றனர்.


காற்று மாசுபாட்டால் ஏற்படும் தாக்கங்களில் குழந்தைகள் பாதிக்கப்படுவது குறித்து பல்வேறு ஊடகங்களும் கவனம் செலுத்துகின்றன. ஆனால், இதனால் உயிரிழக்கும் பத்தில் ஒன்பது பேர் 50 வயதைக் கடந்தவர்களாக இருக்கின்றனர். இது ஒப்பீட்டளவில் ஒரு புதிய விஷயம் ஆகும். 1990-ல் ஐந்து வயதுக்குஉட்பட்ட குழந்தைகள்தான் காற்று மாசினால் பெரிதும் பாதிக்கப்படும் நிலையில் இருந்தார்கள். அப்போது இருந்த பெரிய பிரச்சினை, வீட்டில் ஏற்படும் காற்று மாசுதான். ஆனால், இந்த நிலை தற்போது மாறியுள்ளது. இன்னொரு நல்ல விஷயம், உலகளவில் காற்று மாசின் அபாயகரமான நிலையில் வாழும் மக்களின் எண்ணிக்கை 1990-ல் 96 சதவீதமாக இருந்தது. 2017-ல் அது 92 சதவீதமாகக் குறைந்துள்ளது.இதற்கு முக்கியக் காரணம், அமெரிக்காவில் காற்று மாசின் அளவு வெகுவாக குறைந்திருப்பதாகும். கடந்த நான்கு ஆண்டுகளில் சீனாவும் இதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது எது எப்படியோ, காற்று மாசைக் கட்டுப்படுத்த இன்னும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாக வேண்டும்.

# கருந்துளை ஒளிப்படம் பின்னணியில் செயல்பட்ட பெண்மணி

கேட்டி பவுமேன் என்ற 29 வயதுப் பெண், இதற்கான கணினி செயல் நிரலியை உருவாக்க பிரதான உதவி செய்திருக்கிறார். அதற்கான அணிக்கு, கேட்டி தலைமை தாங்கியிருக்கிறார்.

பூமியில் இருந்து 500 மில்லியன் டிரில்லியன் கிலோமீட்டர் தொலைவில் உள்ள தூசு மற்றும் வாயுவின் ஒளிவட்டத்தை காட்டும் வியக்கத்தக்க கருந்துளை புகைப்படம் சமீபத்தில் வெளியிடப்பட்டது. ஆனால் இது சாத்தியம் ஆகாது என்று முன்னர் நம்பப்பட்டதாக பவுமேன் கூறுகிறார். மசாசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் பயின்றபோது இதற்கான செயல் நிரலியை கேட்டி உருவாக்கத் தொடங்கினார். மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் கணினி அறிவியல் பிரிவைச் சேர்ந்த குழுவினர், செயற்கை நுண்ணறிவு ஆய்வகம், ஹார்வர்டு -ஸ்மித்கோசியன் வானியற்பியல் மையம் மற்றும் மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிலைய ஹேஸ்டாக் வான் கண்காணிப்பு நிலையம் போன்ற பலரின்





உதவியோடு இந்தச் செயல்திட்டத்தை கேட்டி மேற்கொண்டார்.

அவரது அணி உருவாக்கிய செயல் நிரலியால் ஒன்றோடு ஒன்று தொடர்பு ஏற்படுத்தப்பட்ட ஈவன்ட் ஹாரிசான் தொலைநோக்கியால் கருந்துளை புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் புகழ்மிக்க புகைப்படம் வெளியான சில மணிநேரங்களில், டுவிட்டரில் பெயர் டிரெண்ட் ஆனதால் டாக்டர் கேட்டி பவுமேன் சர்வதேச அளவில் பேசப்படும் நபர் ஆனார். மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் ஸ்மித்கோசியன் வானியற்பியல் மையத்தாலும் கேட்டி பாராட்டப்படுகிறார். ‘மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் பட்டதாரி மாணவி கேட்டி பவுமேன் கருந்துளையின் முதலாவது புகைப்படத்தை உருவாக்குவதற்கான புதிய செயல் நிரலியை உருவாக்குவதற்குத் தலைமை தாங்கினார். இன்று, இந்தப் புகைப்படம் வெளியிடப்பட்டுள்ளது’ என்று மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனமும் அதன் செயற்கை நுண்ணறிவு ஆய்வகமும் தெரிவித்துள்ளன. அந்தாட்டிக்கா முதல் சிலி நாடு வரை வேறுபட்ட இடங்களில் இருக்கும் தொலைநோக்கிகளைப் பயன்படுத்தி இந்த புகைப்படத்தை உருவாக்குவதில் 200-க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் ஈடுபட்டனர். கருந்துளையை நமது கண்களால் நேரடியாகப் பார்க்க முடியாது. பூமியைவிட முப்பது லட்சம் மடங்கு பெரிதான கருந்துளை, 4 கோடி கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. மேஸ்சியர் 87 கேலக்சியில் 10 நாட்களாக இது ‘ஸ்கேன்’ செய்யப்பட்டுள்ளது.